

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான,

"பொதுக் கட்டுரைகள்"







தொகுப்பு..
ஆசிரியர்: திரு. இ. அநூஷன்[National Dip.in.Teach]
(தொடர்புகளுக்கு 077-4323124)

01. "சுழல் மாசடையாது பாதுகாத்தல்"



மனிதனை சூழ்ந்துள்ள அனைத்தையும் சேர்த்து நாம் சூழல் என்கின்றோம். அதாவது, **மனிதனின் அத்தியாவசிய, மேலதிக தேவைகள் எல்லாவற்றிக்கும் இருப்பிடமாக அமைவது** சூழலேயாகும். **சூழலுக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்பு மிகவும் நெருக்கத்தன்மை** வாய்ந்ததாக அமைகின்றது. இதனால் **சூழலியல் மாற்றங்கள் மானுட வாழ்விலும், மனிதனுடைய செயற்பாடுகள் சூழலிலும் செல்வாக்குச்** செலுத்துவதைத் தவிர்த்துவிட முடியாதுள்ளது.

நாம் வாழும் **சூழல் பொதுவாக மூன்று வகையில் மாசடைகின்றது** எனலாம். அதாவது **நிலம், நீர், வளி** என்னும் நம்மைச் சூழ்ந்துள்ள பௌதீகக் காரணிகள் பல்வேறு காரணிகளாலும் மாசடைகின்றன. **சூழல் மாசடைவதில் மனிதனுடைய நடவடிக்கைகள் பெரும் செல்வாக்கை** ஏற்படுத்தி வருகின்றது. **மனிதனின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய விழைதல், அதிகரித்து வரும் சனத்தொகை, சூழலுக்கு எதிர் விளைவை ஏற்படுத்தும் அலங்கார ஆடம்பரப் பொருட்களின் பாவனை அதிகரிப்பு** என்பன காரணமாக மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் காட்டும் அதீத ஈடுபாட்டை சூழல் தொடர்பில் செலுத்தாததாலும் சூழல் மாசடைகின்றது. இவை மட்டுமல்லாது, **பெருகிவரும் கைத்தொழிற் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்களும்** சூழலை மாசடையச் செய்வதில் பெரும் பங்காற்றுகிறது.

மனிதன் தனது தேவைக்காக இயற்கை வளங்களையும், மரங்களையும், காடுகளையும் அழிக்கின்றான். இதன் காரணமாக **மழை காலங்களிலும், கடற்கரையை அண்டிய சூழலிலும் மண் அரிப்பு** ஏற்படுகின்றது. **காடழிப்பானது மழை வீழ்ச்சியின் அளவையும் பாதிப்படையச்** செய்கின்றது. **அதிகரித்து வரும் சனத் தொகைக்கேற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும்போது அதிகமான செயற்கை உரப்பயன்பாடும் நிலத்தை அதாவது மண் வளத்தை பெரிதும் பாதிப்படையச்** செய்கின்றது. இதனால் **விவசாய நிலங்கள் கூட விவசாயம் செய்ய முடியாத அளவு உவர் நிலங்களாக மாற்றமடைகின்றன**. இவற்றை விடவும் **திண்மக் கழிவுப் பொருட்கள், மனிதக் கழிவுப் பொருட்கள்** என்பனவும் சூழலில் தாக்கம் விளைவிக்காமல் இல்லை. **இலங்கையில் தலை நகரைப் பொறுத்தவரையில் நாற்பத்து மூன்று தொன் தற்காலிகத் திண்மப் பொருட்கள் வெளியேற்றப்படுவதாக** ஆய்வுகள் கூறுகின்றன.

சூழலில் **வளி மாசடைந்த** வருவதும் இன்று முக்கிய பிரச்சினையாக உள்ளது. **மரங்களை அதிகளவில் வெட்டுவதால் மழை வளம் அருகிச்** செல்லும் அதேவேளை **உயிரினங்களில் உயிர் வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமான ஒட்சிசன் வாயுவின் அடர்த்தியும் வளிமண்டலத்தில் குறைவடைந்து** செல்கின்றது. இது மட்டுமல்லாது **நாடுகளின் யுத்தத்தின் போது பயன்படுத்தப்படும் ஆயுதங்களிலிருந்து வெளியேறும் இரசாயனக் கலவைகள் வளியுடன் சேருவதாலும், போக்குவரத்துச் சாதனங்கள் வெளியேற்றும் புகை தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகை** என்பவற்றிலிருந்து வரும் **காபனீரொட்சைட்டு, சல்பர், ஐதரோகாபன், இதர இரசாயனச் சேர்வைகளினாலும், விண்வெளிக்கலங்களினுடைய பாவனையாலும் வளியானது பெரும் சேதத்திற்குள்ளாகின்றது.**

இவை மட்டுமல்லாது அதிகரித்து வரும் **ஏவுகணைகள், ரொக்கற் பாவனைகள்** கூட **வளிமண்டலத்தில் ஓசோன் படைகளை பாதிப்படையச் செய்கின்றமை உயிரினங்களின் நீண்டகால இருப்பினைக் கேள்விக்குறியாகியுள்ளது. ரஷ்யாவில் செர்னோபியில் இடம் பெற்ற அணு உலை விபத்தால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பலியானமையும், ஜப்பானில் ஹிரோஷிமா நாகசாகி மீது**

நிகழ்த்தப்பட்ட அணுக்குண்டுத் தாக்குதலின் விளைவுகள் இன்று வரை அங்கு தொடர்வதையும், **இந்தியாவில் போபால் நகரத்தின் யூனியன் கார்பனேட் தொழிற்சாலையில் இடம்பெற்ற நச்சு வாயுக் கசிவினால் பல்லாயிரம் மக்கள் பலியானதை**யும் இங்கு கவனத்திற் கொள்ளலாம்.

அடுத்து பௌதீக வளங்களில் ஒன்றான **நீர் மாசடைதல்** பற்றியதாகும். பொதுவாகவே **குளம், ஆறு, கிணறு, வழிந்தோடும் நீர்** என்பன ஏதோ ஒரு வகையில் அசுத்தமடைகின்றன. **தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர், நீர் நிலைகளைச் சென்ற**டைவதினாலும் இதனால் **கிணறு, குளம், நதி, ஏரி என்பன மாசடைவதாலும் நீர் பாரிய அசுத்த நிலைக்கு** உள்ளாகின்றது. இவை மட்டுமல்லாது **சாக்கடைகள், நதிகள், முக்கிய நீர் நிலைகள் என்பவற்றில் மக்கள் போடும் கழிவுப் பொருட்கள், பிளாஸ்திரிக் பொருட்கள் காரணமாக கழிவு நீர் வழிந்தோட முடியாது தடை**ப்படுகின்றது. இதனால் **நோய்க்காவிகள் தொழிற்படும் இழையான், நுளம்பு என்பவனவற்றின் பெருக்கம் வாந்திபேதி, மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்**களையும் மக்களிற்கு ஏற்படுத்துகின்றது. **கிருமிநாசினிகள், வளமாக்கிகளின் கவனிப்பற்ற பிரயோகம்** கூட நீரை மாசுபடுத்துகின்றது.

இவ்வாறு **நிலம், வளி, நீர் என்பன மாசடைவதினால் கொலரா, மலேரியா, டெங்கு காய்ச்சல் என்பவற்றின் தாக்கம் காரணமாக நோய்களும், மரணங்களும் கூட** எமது நாட்டில் இன்றும் நடைபெற்றே வருகின்றது. அத்துடன் **பொலித்தீன் பாவனையால் பச்சைவீட்டு விளைவு, ஓசோன் படை ஓட்டையினால் தோல் சம்பந்தமான நோய்கள்** என்பனவும் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே இச் **சூழல் மாசடைவதைத் தடுப்பது என்பது இன்று முக்கியமான, அத்தியாவசியமான ஒரு நடவடிக்கையாக உலக நாடுகளைப் பொறுத்தவரை உள்ளது**. இப் பாரிய பொறுப்பு விளைவை ஏற்படுத்தி மக்களாலேயே கொஞ்சம் கொஞ்சமாக சீர்ப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். **சுத்தம் சுகம் தரும் என்பதை சூழலியலிலும் கவனித்து, குப்பை கூளங்களை கண்ட கண்ட இடங்களிற் போடுதலைத் தவிர்ப்பதனாலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை பொருத்தமான வழிகளை கையாண்டு வெளியேற்றுவதன் மூலமும் சூழல் சுத்தத்தைப் பேண** முடியும். அத்துடன் **மழை வளத்தை அதிகரிப்பதற்காக மர நடுகை முயற்சிகளை செய்தலும், அதனால் அவற்றின் இலைகள் வெளியேற்றும் நீராவி காற்று மண்டலத்தை சுத்தப்படுத்த**க் கூடியதாகவும் இருக்கும்.

இன்று அனேகமாக **தொழிற்சாலைகள் நகரங்களில் அமைக்கப்படுவதால் மக்களும் செறிவாக நகரங்களிலேயே வாழ விரும்பு**கின்றனர். **செறிவான சனத்தொகை சுகாதார சீர்கேடுகளையும், குடிநீர் பற்றாக்குறையையும் ஏற்படுத்து**கின்றது. **கண்ட கண்ட இடங்களில் குப்பை போடுதல், மலசலம் கழித்தல்** என்பனவும் இதனால் அதிகரிக்கலாம். இவ் விளைவைத் தடுப்பதற்கு **தொழிற்சாலைகள் நாட்டில் பரவலான முறையில் உருவாக்க**ப்படல் சிறந்ததாகும்.

தகுந்த முறையில் சூழலை அசுத்தமாக்காத வகையில் செயற்படாத தொழிற்சாலைகளை அரசாங்கம் செயற்பட அனுமதி வழங்கக் கூடாது. இதன் மூலமாகவும் சூழல் மாசடைதலை ஓரளவேனும் தவிர்த்துக் கொள்ளலாம். அத்துடன் **விவசாய நடவடிக்கைகளில் மீள் சுழற்சி முறையைப் பின்பற்றுதலும் நிலத்தை பாதுகாப்பதற்கான ஓர் வழி**யாகும். **அரசாங்கம் சூழல் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களை உள்ளடக்கியதாகவும், தகுதியற்ற வாகனங்களிற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்காது விடுதல்** மூலமாகவும் சூழலின் சுத்தத்தைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்" என்ற வகையில் **மனிதன் தன்னுடைய தேகவியல் ஆரோக்கியத்தையும், எதிர்கால சந்ததியினரின் வாழ்வியல் பற்றியும் சிந்தித்து, சூழல் பாதுகாப்பினையும், சுகாதார சூழலையும் உருவாக்குதல்** அவசியமாகும். ஒவ்வொரு மனிதனும்

சூழலியல் தொடர்பான கருத்துக்களையும், அத்தியாவசியத்தையும் உணர்ந்து கொள்வதன் மூலமாகவும், அதற்கேற்ப செயற்படுவதன் மூலமாகவுமே சூழல் அசுத்தமாவதை தடை செய்ய முடியும். இதற்கு **நல்ல சூழலே நல்ல ஆரோக்கியமான வாழ்வை அளிக்கும்** என்ற உண்மையை அனைவரும் உணருதல் அவசியமானதாகும்.

02. "கல்வி"



"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்என்ப வாழும் உயிர்க்கு" - (திருக்குறள்)

கேடில் விழுச்செல்வம் கல்வி என்று விளக்கிய வள்ளுவர். அந்த அழியாச் செல்வமாகிய கல்வியைக் கற்பதினால் வரும் சிறப்புகளையும் குறிப்பிடுகிறார். அது **கண் போன்றது** என்கிறார். **'கண்' என்றால் தமிழில் ஒளி** என்று பொருள். கல்வி எவ்வாறு ஒளியாக விளங்குகிறது என்பதையும் விளக்குகிறார். **எல்லா உறுப்புகளும் சரியாக இருந்தும், 'கண்' இல்லாவிட்டால் ஒருவனால், பொருள்களையும், காட்சிகளையும், இயற்கையின் அழகுகளையும் காண இயலாது**. எனவே அவன் ஒரு முழுமைபெற்ற மனிதனாகக் கருதப்படமாட்டான். இந்த உண்மையின் அடிப்படையில், **கல்வியின் முக்கியத்துவத்தையும், தேவையையும் வற்புறுத்த விரும்பிய வள்ளுவர், கல்வியைக் கண்ணோடு ஒப்பிடுகிறார்**.

நம் வாழ்க்கையின் இன்பதுன்பங்கள் பலவற்றிற்கும், புறக்காட்சிகளும், நிகழ்ச்சிகளும்தானே காரணம்? நாம் பார்க்கும் சில விபத்துகள் நம் உள்ளத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. நம் கண்முன்னாலே அடிக்கடித் தோன்றி மறைகின்றன. இந்தக்காட்சியை நாம் பார்த்திருக்காவிட்டால், எந்தப் பாதிப்பும் ஏற்படாது இல்லையா? **மகிழ்ச்சியோ, துன்பமோ, நாம் பார்க்கும் காட்சி அல்லது நிகழ்ச்சியால் தானே அமைகின்றது? இந்த அனுபவத்தை அல்லது நுகர்வை எது வழங்குகிறது? கண்.** காலம்காலமாக **அறிஞர்களும் சான்றோர்களும் தாம் கண்டவற்றையும், அவற்றின் அடியில் எழுந்த சித்தாந்தங்களையும், கொள்கைகளையும், கண்டுபிடிப்புகளையும், அறிவுரைகளையும், இன்ன பிறவற்றையும் நம் புலனுக்குக் கொண்டு வருவது கல்வியே.** இக்காரணம் கருதி, வள்ளுவர், கல்வியைக் கண் என்கிறார். **கல்வியின் அடிப்படை எண்ணும் எழுத்தும். இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல், கணிதம் எனக் கல்வியின் துறைகள் அனைத்தும் எண்ணையும் எழுத்தையும் சார்ந்தே** அமைந்துள்ளன.

'இன்று மனித வாழ்வில் பெரிய புரட்சியை ஏற்படுத்தி, நாள்ஒருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் **கணிப்பொறி ' 0 ', ' 1 ' என்ற இரண்டு எண்களின் அடிப்படையில்** செயல்படுகின்றது. இதில், முழுவதுமாக எண்ணை அடிப்படையாகக் கொண்ட குறியீட்டு மொழிகளைத் தான் பயன்படுத்துகிறார்கள். எனவே, **'எண்ணென்ப, ஏனை எழுத்தென்ப'** என்று கூறிய வள்ளுவர், எண்ணின் இடத்தையும், எழுத்தின் இடத்தையும் ஆழமாக, அறிவார்த்தமாக அறிந்தே எழுதியிருக்கிறார். காலம், இடம் இரண்டும் கடந்து நிற்கும் தன்மை வாய்ந்த உண்மைகளை மட்டும் இயன்ற அளவில் அசாதாரண மேதைத்தன்மையுடன் வடித்து எடுத்துச் சொல்லும் உத்தியைத் தமது நூல்முழுவதும் பெரும்பாலும் கையாண்டிருக்கிறார்.

"எண் என்பது இலக்கம். எண் என்பது கணிதம். எண் என்பது மனம். எண் என்பது சிந்தனை. தமிழர்கள் மனத்திற்கும், மனத்தில் எழும் சிந்தனைக்கும், சிந்தனையின் உயர்ந்த நிலையில்

உருவாகும், கணிதத்திற்கும், கணிதத்தின் அடிப்படையான இலக்கம் எனும் குறியீட்டிற்கும், ஒரே சொல்லைப் பயன்படுத்தி இருப்பது, வியக்கத்தக்க ஒன்றாகும்" (வா.செ.குழந்தைசாமி)

❖ **கல்விப் பயன்.**

நமது **அறியாமையை நீக்கி அறிவைப் பெருக்கி நமக்கு உதவியாக இருக்**கின்ற கல்வியானது **நால்வகைப் பயனையும் நமக்குத்** தருகிறது. **அறம், பொருள், இன்பம், வீடு** என்பவையே நால்வகைப் பயன்கள் ஆகும். இதை,

"அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்இசையும் நாட்டும் உறும்கவல்ஒன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்குஇல்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை"

என்னும் நீதிநெறி விளக்கப் பாடல் உணர்த்துகிறது.

❖ **கற்றபடி ஒழுகுதல்.**

கல்வி **கற்றவர்கள், தாம் கற்றவற்றை வாழ்வில் பயன்படுத்த** வேண்டும். கல்வியின் வாயிலாகத் தாம் **கற்ற அறநெறிகளை வாழ்க்கையில் பின்பற்ற** வேண்டும். அவ்வாறு **பின்பற்றினால்தான் கற்ற கல்வியால் பயன்** உண்டு. **கற்றதன்படி அறநெறிகளைப் பின்பற்றி வாழாதவன் பிறருக்கு அறநெறிகளைக் கூறினால் அவனது உள்ளமே அவனுக்குப் பெருந்துன்பத்தை**க் கொடுத்துவிடும்.

"கற்று, பிறர்க்கு உரைத்து, தாம் நில்லார் வாய்ப்படுஉம்
வெற்று உரைக்கு உண்டு ஓர்வலி உடைமை - சொற்ற நீர்
நில்லாதது என்? என்று நாண் உறைப்ப நேர்ந்து ஒருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்" **குமரகுருபரர்**

அறநெறிகளைக் கற்று, அந்த அறக் கருத்துகளைப் பிறர்க்கு உரைக்கின்ற ஒருவர் அந்த அறநெறிகளைப் பின்பற்றாவிட்டால் அவர் கூறுகின்ற உரை வெற்றுரை ஆகும். இவ்வாறு அறநெறிகளைப் பின்பற்றாமல் வெற்றுரைகளைக் கூறுகின்ற ஒருவரைப் பார்த்து, **'அறநெறிகளை விளக்கும் நீங்கள் அந்த அறநெறிகளைப் பின்பற்ற வில்லையே'** என்று சுட்டிக் காட்ட நேரிடும். **கற்றபடி வாழ்க்கை இருக்க வேண்டும் என்பதைத் திருக்குறளில் திருவள்ளுவரும் வலியுறுத்தி**யுள்ளார். **'கற்கக் கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக'** (391) என்னும் குறளில் இதே கருத்து இடம் பெற்றிருப்பதை நீங்கள் காணமுடியும்.

❖ **கல்வி அழகு.**

கற்றவர்க்குக் கல்வியே அழகைக் கொடுக்கும். அவர்கள் வேறு அணிகலன்களை அணியவேண்டாம். **கற்றவர்கள் மேலும் அணிகலன்களை அணிந்துகொண்டு தம்மை அழகுபடுத்த விரும்புவது நன்கு வடிவமைத்த அணிகலனை மேலும் அழகுபடுத்துவதைப் போன்றது** ஆகும்.

"கற்றார்க்குக் கல்வி நலனே கலன்அல்லால்
மற்றுஓர் அணிகலம் வேண்டாவாம்"

என்னும் பாடலில் **அழகை யாரும் அழகுபடுத்த விரும்பமாட்டார்கள். அதுபோல, கல்வி கற்றவர்களுக்கு எந்த அணிகலமும் தேவை இல்லை** என்று நீதிநெறி விளக்கம் விளக்கியுள்ளது.

❖ **கல்வி பற்றிய பாடல் மேற்கோள்கள்(திருக்குறள், ஔவையார், நான்மணிக்கடிகை, நாலடியார்)**

"கல்வி கரையில் கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பிணி பல் - தெள்ளிதின்

ஆராய்ந்த் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. (நாலடியார்)''
''குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு''
''வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது..''
''கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு''

❖ **கல்வி, அறியாமையைப் போக்குவது என்பதை நான்மணிக் கடிகையும் தெரிவித்துள்ளது.**

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து''
''மன்னனும் மாசறக் கறறோனை சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-மன்னனுக்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு'' - (ஔவையார்)

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!" - **தம் ஆசிரியருக்கு ஒரு துன்பம் வந்தபோது உடன் சென்று அதனைத் தீர்ப்பதற்குத் துணைநிற்க** வேண்டும். **மிகுதியான பொருளை அவருக்குக் கொடுத்தாவது கல்விகற்றல்** வேண்டும்.

அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' - பாரதியார்

❖ **கல்வி பற்றிய அறிஞர் கருத்துக்கள்.**

- **ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோகமும் கிடையாது**!- காந்தியடிகள்
- மனித ஆளுமை அளவிட முடியாத திறன் வாய்ந்தது என்பதில் நான் திடமான நம்பிக்கை கொண்டுள்ளேன் ஒவ்வொருவரும் ஒரு ஆக்கராக முடியும் - அவர்களின் தடயத்தை இவ்வுலகில் விட்டுச் செல்ல முடியும்.
- காற்றில் அலைக்கழிக்கப்படும் தூசு போல ஒன்றுக்கும் உதவாதவன் என்று எவருமே இருக்கக் கூடாது ஒவ்வொருவரும் ஒளிர வேண்டும் - கோடானுகோடி விண்மீன் திரள்கள், ஒவ்வொன்றும் ஒளிருவதைப் போல. - வாசிலி சுகோம்லின்ஸ்கி
- கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்படவேண்டிய அவசியமெல்லாம் ஒருவன் தன் வாழ்நாளில் முழு சுதந்திரத்தோடு வாழ்வதற்குத் தகுதிபடுத்துவது என்பதேயாகும். அல்லது உலகில் நல்வாழ்க்கை வாழத் தகுதியுடையவனாக்குவது என்பதாகும். - தந்தை பெரியார்
- **இளமையில் கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன் எதிர்கால வாழ்விலும் இறந்தவன்**! - யூரிபிடிஸ்
- **கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது ஏனெனில் அறியாமைதான் தீவினையின் மூலவேர்**! - பிளேட்டோ
- **கல்வி ஒரு மூட்டை நூல்களை வாசிப்பது அன்று. அடக்கம், ஒழுங்கு, அறம், நீதி இவற்றின் முன்மாதிரியாகும்**! - எட்மண்ட்பர்க்
- கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று: ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும்! - ரஸ்கின் பாண்ட்
- வாழ்க்கை அனுபவமில்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது! - பெர்னார்ட்ஷா

- நாம் கற்றுக் கொண்டதைப் போற்ற வேண்டும் நமக்குத் தெரிந்தவற்றை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்! - மூர்
- **சான்றோன் ஆக்காத கல்வி சாமர்த்தியமாய்க் கழித்த சோம்பலேயாகும்**! - போலிங் புஷ்ரூக்
- தனிமனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதுமே கல்வி! - பெஸ்டலசி
- **ஒரு குழந்தை கனவானாகவோ, சீமாட்டியாகவோ இருக்கும்படி செய்வது கல்வியல்ல. நல்ல மனிதனாக இருக்கச் செய்வதே கல்வி**! - ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்

03. "விஞ்ஞானமும் மனித வாழ்வும்"



உலகம் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உலகில் நடைபெறும் நிகழ்வுகள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. **கணினி, இணையம், உலகமயமாக்கல் எனப்பல புரட்சிமிகு நிலைகள் உண்டாக்கப்பட்டதன் விளைவாக உலகமே ஒரு குக்கிராமமாய்** உருவெடுத்துள்ளது என்பதை எவருமே புரிந்து கொள்வர்.

ஆரம்பகாலங்களில் மனிதன் காடுகளிலும், மலைக்குகைகளிலும் தன்னுடைய பகாலங்களில் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டான். இவ்வாறு வாழ்ந்தவன் படிப்படியாக தன்னுடைய **அறிவுக் கூர்மை**யை கொண்டு சிந்திக்கத் தொடங்கினேன். **ஆற்றங்கரைகளில் குடியேற்றங்களை அமைத்துக் கொண்ட மனிதன் காலப்போக்கில் விவசாயம், கைத்தொழில்** என தன்னுடைய சிந்தனையை நடைமுறைகளில் செயற்படுத்தத் தொடங்கினான். **குகைகளில் வாழ்ந்த மனிதன் இன்று தொடர்மாடி மனைவாழ்வு மற்றும் விவசாயம், கைத்தொழில் என்ற பாரிய புரட்சி**களுடனும் செயற்பட்டு வருகின்றான்.

மனிதனுடைய நாகரிக வளர்ச்சிக்கு விஞ்ஞானவிருத்தியே பெரிதும் உயிர்நாடியாக விளங்குகின்றது. **குண்டூசி தொடக்கம் அணுகுண்டுவரை மனிதகுலத்தின் மகத்தான சாதனைகள்** தொடர்கின்றன. சில வேளைகளில் இந்த சாதனைகளுக்கு அவலம் நேரத்தான் செய்கின்றது. **மனிதகுலத்தின் சக்தித் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அரிய கண்டுபிடிப்பான அணுச்சக்தியை ஹிரோசிமா, நாகசாகி என்ற இரண்டு நகரங்களின் அழிவுக்கு** பயன்படுத்திய மனித புத்திக்காக அந்த சாதனையை நொந்து பயனில்லை.

மனிதனுடைய வாழ்வு இன்று விஞ்ஞானத்தோடு பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகிறது. விஞ்ஞானம் இன்றி மனிதனுடைய வாழ்க்கை என்பது இல்லை என்ற அளவுக்கு உலகம் உருண்டோடிக் கொண்டிருக்கிறது. **யப்பானில் ஒரு மனிதனுடைய மூளை கூட குரங்கிற்கு** மாற்றப்பட்டுள்ளது. மருத்துவத் துறையானது இன்று பாரிய அளவில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கின்றது. **மனிதன் செய்ய முடியாத பல வேலைகளை இயந்திரத்தின் உதவிகொண்டு மனிதன் சாத்தியப்படுத்தி**க் கொண்டிருக்கின்றான். **இதயமாற்று சிகிச்சைகள், ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளை பிரித்தல், கண்மாற்றுச்சிகிச்சை** போன்றன இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் வெற்றியளித்துக் கொண்டிருக்கின்றன.

உலகத்தில் **விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் பல ஆக்கப்பாடான நிகழ்வுகள் இடம் பெற்றாலும், அழிவை நோக்கி செல்கின்ற நிகழ்வுகளும்** இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மாபெரும் விஞ்ஞானவளர்ச்சியை நோக்கி இன்று உலகம் செயற்பட்டாலும் பாரிய அழிவுகளை தடுக்கவும் முடியாமல் இருக்கின்றது. அதாவது கடந்த **2004 ஆம் ஆண்டு தென்னாசியாவைத் தாக்கிய "சுனாமி" அனர்த்தத்தை விஞ்ஞானத்தால் எதிர்வு கூறமுடியாமல்** போய்விட்டது.

விஞ்ஞான மறுமலர்ச்சி முதன்முதலில் ஐரோப்பிய நாடுகளில் அதைத் தொடர்ந்து அமெரிக்கா, ஆசிய நாடுகளிலும் ஏற்பட்டதன் விளைவாக பல அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் விஞ்ஞானிகளும் பல கொள்கைகளையும், கருத்துக்களையும் ஆராய்ந்து பல கண்டுபிடிப்புக்களை கண்டறிந்தனர். இதன் விளைவாக **தொலைத் தொடர்பு சாதனங்கள், போக்குவரத்து ஊடகங்கள், கைத்தொழிற்சாலைகள், மருத்துவசாலைகள், எரிபொருட்கள்** போன்ற **எண்ணரிய சாதனங்களும் கைத்தொழில்களும் கண்டுபிடிக்க**ப்பட்டன.

இதன் உச்சவளர்ச்சியாக **சந்திரன், செவ்வாய் போன்றவற்றுக்கு விண்கலங்களை அனுப்பி** அது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்றான். **செவ்வாயில் மனித இனம் வாழ்வதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்**ந்து கொண்டிருக்கின்றான். **சந்திரனுக்கு விண்கலங்கள் ஏவுவதன் மூலம் விஞ்ஞானத்தின் உச்சவளர்ச்சி** வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மனிதனுக்கு அன்றாட வாழ்வில் கூட விஞ்ஞானம் தன்னுடைய அரிய பங்களிப்பை ஆற்றுகின்றன. தொலைத்தொடர்பு சாதனங்கள் முதல் போக்குவரத்து ஊடகங்கள் வரை விஞ்ஞானவளர்ச்சியானது மனிதனுக்கு அதிகமாக நல்ல விடயங்களையே அளிக்கின்றன எனலாம். **தொலைத்தொடர்பு சாதனங்களைப் பொறுத்தவரை இன்று உலகின் எந்த மூலையில் என்ன விடயங்கள் இடம் பெற்றாலும் அதனை நேரடியாகவே** எம்மால் பார்க்ககூடியாதாக உள்ளது. ஆரம்பகாலகட்டங்களில் அதாவது தொலைத்தொடர்பு சாதனங்கள் தோற்றம் பெற்ற காலகட்டங்களில் எந்தவொரு நிகழ்ச்சியாக இருந்தாலும் அவை பதிவு செய்யப்பட்டு ஒலி, ஒளி பரப்பப்பட்டு வந்தன. ஆனால் காலப்போக்கில் பல மணித்தியால நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள் என்பனவும் எங்கு இடம் பெற்றாலும் உலகளாவியரீதியில் குறிப்பிட்ட ஏதோவொரு அலைவரிசையின் ஊடாக ஒலி, ஒளிபரப்பி வருகின்றனர்.

மனிதனுடைய **விஞ்ஞானப் புரட்சியில் மிக முக்கியம் வகிப்பது கணினி** ஆகும். இந்த கணினி மூலம் இன்று பல விடயங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் **நல்ல பல விடயங்கள் இடம் பெற்றாலும் நிராகரிக்கப்படக் கூடிய சில நிகழ்வுகளும்** இடம் பெறத்தான் செய்கின்றன. இணையத்தினை எடுத்து நோக்குகின்ற பொழுது **இணையத்தளங்கள் வாயிலாக தகவல்களைப் பெறவும் மின்வர்த்தகம் செய்யவும் மின்னஞ்சல் வாயிலாக தகவல்பரிமாற்றம் மேற்கொள்ள**லாம் என்ற நிலைகளை எல்லாம் தாண்டி மரணங்களும் சிலவேளை இணையத்தளங்கள் ஊடாக நிச்சயிக்கப்படுகின்றன. **அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற இணையத்தளம் ஒன்று மரணச்சடங்குகளை தனது தளத்தின் ஊடாக ஒலி - ஒளிபரப்பு** செய்கிறது.

இணையத்தளங்களின் மூலம் பல அழிவுகரமான விடயங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. **இணையத்தளத்தில் தீய அல்லது பார்க்கக் கூடாத இணையப்பகுதிகளைப் பார்வையிடுவதன் மூலம் முற்றுமுழுதாக அவர்கள் அதற்கு அடிமைகளாகவே மாறி**விடுகின்றனர். இதனால் அவர்களுடைய வாழ்க்கையே திசைமாறிச் செல்கின்ற ஒரு நிலை ஏற்படுகின்றது.

குறிப்பாக இன்றைய காலகட்டத்திலே மாணவர்களை அதிகமாக தன் பக்கம் தீய விடயங்களுக்காக சுண்டி இழுக்கும் விடயம் இணையத்தில் ஆங்காங்கே காணப்படுகின்ற **நிராகரிக்கப்பட்ட நீலப்படங்கள், வீடியோக்கள்** போன்றவையாகும். இதனால் **மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு அவர்களுடைய சமூக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு வாழ்க்கையே திசை மாறிச்** செல்கின்ற ஒரு நிலைப்பாடு காணப்படுகிறது எனலாம்.

விஞ்ஞானத்தின் விருத்தி என்பன ஏற்படாவிட்டால் மனிதனால் பல விடயங்களை சாதித்திருக்கவும் முடியாது, செயற்படுத்தவும் முடியாது. **ரைட் சகோதரர்களால் விமானம் என்ற சாதனம் கண்டுபிடிக்கப்பட்டிருக்காவிடின் வெளியூர் பயணங்கள், வெளிநாட்டுத் தொடர்புகள் என்பவை மட்டுப்படுத்தப்பட்டதாகவே** இருந்திருக்கும். இதனால் பல செயற்பாடுகள் ஒரு வரையறைக்குள்

உள்ளடங்கியிருக்கும். **விமானத்தின் தோற்றம் பல நல்ல விடயங்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தாலும் சில நாட்டு அரசாங்கங்கள் தம் சுயநல நோக்குகளை அதாவது தம் எதிர் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு விமானம் மூலம் குண்டுகளை பொழியும் செயற்பாட்டை நெறிப்படுத்தி**க் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் **இலக்குகள் தவறுகின்றன. எதிர்பாராத மக்களே அதிகமாக இறந்து** போகின்றனர்.

குதிரை, மாட்டுவண்டில் என்ற மனிதனுடைய போக்குவரத்துக்கள் இன்று பில்லியன் கணக்கில் கார்களை சௌகரிய முறையில் உற்பத்தி செய்ய விஞ்ஞானமும் வளர்ந்து விட்டது மனிதனும் முன்னேறிவிட்டான். **கார்மட்டுமல்ல பல போக்குவரத்து சாதனங்கள், போர் ஆயுதங்களின் உற்பத்தி போன்றனவும் மிகவும் அதிகரித்து**ச் செல்லும் ஒன்றாகவே காணப்படுகின்றன. **ஆயுதங்கள் என்பவை தற்காப்பிற்காக தேவை என்ற ஒரு நிலை காணப்பட்டாலும் அதன் பிரயோகம் என்பது மிகவும் குறைந்தவொரு சதவீதத்திலேயே** காணப்படுவதால் சிலவேளைகளில் விஞ்ஞானவளர்ச்சி தேவையில்லை என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

இது மட்டுமல்ல **தொலைக்காட்சி, தொலைபேசி, வானொலி போன்ற பல கருவிகள் மூலம் நல்ல செயற்பாடுகள் இடம்பெற்றாலும், சில மனித ஜீவன்கள் இதனை தவறான விடயங்களுக்காக** செயற்படுத்துகின்றனர். தொலைக்காட்சியை பொறுத்தவரை தவறான சில விடயங்கள் தாமும் கைக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

எனவே **மனிதனுடைய வாழ்வானது விஞ்ஞானத்தின் விருத்தியோடு பின்னிப் பிணை**ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. எது எப்படியிருந்தாலும் **நல்லவிடயங்கள் அல்லது சில நிகழ்வுகளில் தீயவிடயங்களை முற்றுமுழுதாக தவிர்ப்பது என்பது கடினமான காரிய**மாகும்.

04. "இலத்திரனியல் ஊடகமும் இளைய சமூகமும்"



ஊடகம் என்பது **தொடர்பாடலுக்கான ஒரு சாதனம்** ஆகும். இவற்றை **அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம்** என்று இரண்டு வகைப்படுத்தலாம். **கைத்தொழில் புரட்சியும் அதனால் ஏற்பட்ட பல நவீன சிந்தனைகளும், தொழில்நுட்ப வசதிகளும் இன்றைய உலகில் பல மாற்றங்களை** ஏற்படுத்தியுள்ளன. அந்தவகையில் **தகவல் தொடர்பாடலில் இலத்திரனியல் ஊடகங்களின் செல்வாக்கு பரந்துபட்டு விசாலமடையத் தொடங்கியதோடு இருபத்தியோராம் நூற்றாண்டின் போக்கைத் தீர்மானிக்கும் மாபெரும் சக்தியாக** உருவெடுத்துள்ளது. தற்கால உலகில் இலத்திரனியல் ஊடகங்கள் **மனிதருக்கு இடையிலான தொடர்பாடலை இலகுபடுத்தி உலகத்தினைச் சுருக்கி ஒரு கிராமமாக்கி வைத்து**ள்ளது. இலத்திரனியல் ஊடகங்களின் **பிரதான நுகர்வோராக இளைய சமூகத்தினர்** விளங்குகின்றனர். இந்நுகர்வு நன்மை, தீமை என்று விளைவுகளை ஆழமாக ஏற்படுத்துகின்றது. **நடத்தை, நாகரிகம், கல்வி, உறவு, சமூகம், பண்பாடு, பொருளாதாரம், அபிவிருத்தி, ஆரோக்கியம்** என்பவற்றில் இவற்றின் தாக்கம் குறிப்பிடத்தக்கது.

இலத்திரனியல் ஊடகங்கள்

தொலைக்காட்சி, வானொலி, கணினி, தொலைபேசி, இணையம்(சமூகவலைத்தளங்கள்)

இலத்திரனியல் ஊடகங்களால் இளைய தலைமுறைக்குக் கிடைக்கும் நன்மைகள்

- தேடுபொறிகளின் மூலம் **எந்தவொரு விடயத்தையும் கற்றுக்கொள்ளவும் பெற்றுக்கொள்ளவும் உடனடி வசதி** உள்ளது.
- **விரலால் உலகத்தை தரிசனம்** செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

- **மிகக்குறுகிய நேரத்துள் எந்தவொரு விடயத்தையோ செய்தியையோ எங்கிருந்துகொண்டும் அறியவும், அனுப்பவும்** மிகப்பெரிய வலையமைப்பு ஏற்பட்டுள்ளது.
- **மின்நூலகங்களின் மூலம் ஒரு புத்தகத்தையே எத்தனை பேரும் படிக்கும் வசதி** ஏற்பட்டுள்ளது.
- புத்தகங்களை கட்டுக்கட்டாகச் சுமந்து கொண்டு செல்லாமல் **தனி உள்ளங்கைக் கணினிகள் மூலம் எல்லா வகையான அறிவுப்பொக்கிசங்களையும் சுமக்கும் வாய்ப்பு** ஏற்பட்டுள்ளது.
- இனிவரும் காலங்களில் **புத்தகப்பைச் சுமை மாணவர்களுக்கு ஏற்படாமல் புதிய வகுப்பறைச் சூழல்கள் ஏற்படுவதற்கு திட்டங்கள்** விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் உள்ளங்கைக் கணினிகள் மாணவர்களுக்குக் கிடைப்பதற்கு ஏதுவாக வரவுசெலவுத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- **இளைய தலைமுறையினர் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கும் புதிய செயலாற்றுகைகளில் ஒன்றுபடுவதற்குமான புதிய களமாக** சமூக வலைத்தளங்கள் விரிந்துள்ளன. அண்மையில் **ஜல்லிக்கட்டுக்கான ஆதரவு உலகளாவிய ரீதியில் புரட்சி** மனப்பான்மையுடன் வெளிப்படுத்தப்பட்டு வெற்றி கண்டமையைக் குறிப்பிடலாம்.
- **வேலைவாய்ப்புகள், கற்பதற்கான வசதிகள்** என்பவற்றை **உடனடியாக அறிந்து** கொள்வதற்கும் **பகிர்ந்து**கொள்வதற்குமான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
- கிணற்றுத்தவளைகளாக இல்லாமல் **உலகத்தில் நடைபெறும் எல்லா விடயங்களையும் உற்றுநோக்கவும் அதற்கேற்ப தனது சிந்தனையோட்டம் உலகம் மீதான தனது பரந்துபட்ட பார்வை**யைச் செலுத்தவும் முடியும்.
- **மின்வணிக நடவடிக்கை**களில் ஈடுபட முடியும்.
- மின்கல்வி மூலமாக **உலகத்தில் உள்ள எந்தக் கல்லூரியிலும்/பல்கலைக்கழகத்திலும் கற்கும்** வாய்ப்பு.

தீமைகள்

- **இலத்திரனியல் அடிமை**களாக்கியுள்ளது
- **நேர மூழ்கடிப்பு, கல்வி மூழ்கடிப்பு** ஆகியன எளிதாக இடம்பெற்றுவிடுகின்றது.
- **தேடுபொறிகளில் பாலியல் தேடலில் இலங்கை முதலிடத்தில் இருக்குமளவுக்கு சீரழிவு**க்கு இளைய தலைமுறை ஆளாகியுள்ளது.
- **உலகத்தில் இருந்து கொண்டே ஓர் அந்நியமாதலுக்கு** இடமளித்துவிடுகின்றது. **உறவுகளில் இருந்து விலகல்** என்பதும் நிகழ்கிறது.
- **தொடுதிரைக் கைபேசிகள் உளச்சிக்கல் உள்ளவர்கள் போல் இளைய தலைமுறை**யை ஆக்கிவிடுகின்றது.
- **பெண்கள் தமது ஆளுமைகளையும் ஆற்றல்களையும் மறந்து தொலைக்காட்சிக்கு** முன்னால் **சரணடைந்து**விட்டார்கள். **பிள்ளை வளர்ப்பு, விருந்தோம்பல், கலாசாரம்** என்பவற்றில் இது பாரிய தாக்கத்தை ஏற்படுகின்றது.
- **திடீர்க்காதல், திடீர்த் தற்கொலைகள்** அதிகரித்துவிட்டன.
- **ஆளுமைகளையும் கடமைகளையும் மறக்கும் சூழல்** ஏற்பட்டுள்ளது.
- **வாசிப்பு மிக அருகி**விட்டது.
- **ஆளுமைகள் குறையத்தொடங்கி**விட்டன.
- **ஆரோக்கியக்குறைவுகள் அதிகரித்து**விட்டன.
- **தவறான சகபாடிகளுடனான** தொடர்பு, **தவறான வதந்தி**கள் பரவல்.

தீர்வுகள்

- இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தும் **பெற்றோர் அவற்றுக்கு அடிமையாகாமல் பிள்ளைகளுக்கு வழிகாட்டக்கூடிய தகுதியுடன் தங்களைத் தகவமைத்துக்கொள்ளல்** வேண்டும்.(தொலைபேசி, இணையம், தொலைக்காட்சி)
- **தனித்தனி அறைகளில் இருக்கும் பிள்ளைகளிடம் தனியான இலத்திரனியல் பாவனையை இயலுமானவரை தவிர்க்கவேண்டும்.**
- **வீட்டில் எல்லோருக்கும் தெரியக்கூடிய இடத்தில் இணையப்பாவனையில் பிள்ளைகள்** ஈடுபட அனுமதித்தல்.
- வீட்டில் இணைய வசதிகளை ஏற்படுத்தும் போது **ஆபாச வலைத்தளங்களை மென்பொருளின் மூலம் தடைசெய்தல்.**
- குறிப்பிட்ட **நேரவரையறையை பயன்பாட்டில்** கடைப்பிடித்தல்.



05. "பெண் பாதுகாப்பு"

பெண்களுக்கு எதிரான வன்முறையின் மிகவும் பொதுவான வகைகள் எவை?

பெண்களுக்கு எதிரான வன்முறையின் பெருமளவு வகைகள் உள்ளன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: **அந்நியோன்யமான துணைவர் மூலமான வன்முறை, பாலியல்வல்லுறவு, திருமணம்சார்ந்த பாலியல்வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை அத்துடன் தொந்தரவு, சீதனம் தொடர்பான வன்முறை, வாழ்க்கைத் துணைசாராத வன்முறை, வீட்டு வேலையாட்களுக்கு எதிரான வன்முறை, கேலிசெய்தல், ஆட்கடத்தல் மற்றும் ஆபாசப்புகைப்படம் போன்ற சுரண்டலின் வேறு வடிவங்கள், சமூக வழக்கத்திற்கும், கலாசாரத்திற்கும், பாரம்பரியத்திற்கும் சமயத்திற்குமான மேற்கோளினால் நியாயப்படுத்தப்பட்டு, கெடுதலை விளைவிக்கும் வழக்கங்களின் காரணமாக பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை. மேலதிகமாக, பெண் சிசுக்கொலையையும், இளமைப்பருவத் திருமணத்தையும், நிர்ப்பந்தத்திலான திருமணத்தை**யும் உள்ளடக்கலாம்.

இது எங்கு இடம்பெறலாம்?

பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை ஏதாவது இடத்தில் இடம்பெறலாம். இது **வீட்டில், குடும்பத்தில் அல்லது சனசமூகத்தில், வேலை செய்யும் இடத்தில், பொது இடங்களில்** மற்றும் **போக்குவரத்தில், விசேடமாக இயற்கை அழிவுகளில், உள்நாட்டு மோதலில், யுத்தத்தில் மற்றும் கிளர்ச்சிகள்** போன்ற பொது குழப்பங்களின் தருணங்களில் அத்துடன் இச் சூழ்நிலைகளின் காரணமாக உள்ளகரீதியாக இடம்பெயரும் போதும் இடம்பெறலாம்

பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான பால்நிலை - அடிப்படையிலான வன்முறையின் அல்லது வன்முறையின் பிரதான வடிவங்கள் வழமையாக பின்வருமாறு வன்முறை வகைப்படுத்தப்படுகின்றது

- உடல்ரீதியான
- உணர்வுப்பூர்வமான/உளவியல்ரீதியான
- பாலியல்ரீதியான
- வாய்மொழியிலான

- பொருளாதாரரீதியான (கவர்ந்து கொள்ளல்)
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான வன்முறை (இன்டர்நெற், கையடக்கத் தொலைபேசிகள் போன்றன)

இலங்கையில் பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிராக வன்முறையின் மிகவும் பொதுவான வகைகள்

- வீட்டு வன்முறை
- பாலியல் தொந்தரவு
- பாலியல்வல்லுறவு
- முறை தவறிய உடலுறவு
- பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்
- ஆட்கடத்தல்
- வன்முறை தொடர்பிலான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

உலகளாவிய ரீதியில் பெண்கள் பல விதமான வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை வெளி உலகிற்கு காட்டி அதற்கான நியாயமான தீர்வுகளை எட்டுவதற்காக **சர்வதேச மகளிர் தினம்** மற்றும் **பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம்** ஆகியன முன்வைக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1999 டிசம்பர் 17 இல் கூடிய போது ஆண்டு தோறும் நவம்பர் 25 பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினமாகப் பிரகடனம் செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றியது. இத்தீர்மானம் **ஐக்கிய நாடுகள் சபையின் 54/134 இலக்க பிரேரணை**யாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

டொமினிக்கன் குடியரசில் 1960 நவம்பர் 25 இல் மிராபெல் சகோதரிகள் என அழைக்கப்படும் மூன்று சகோதரிகள் அவர்களின் அரசியல் செயற்பாடுகளுக்காக அந்நாட்டின் அன்றைய ஆட்சியாளர் ரபாயெல் டுருஜிலியோ வின் (1930 - 1961) உத்தரவின் பேரில் படுகொலை செய்யப்பட்டனர். **சமூகத்தில் பாதிக்கப்படும் பெண்களுக்கெதிராகவே இவர்கள் சிறப்பாகக் குரல் கொடுத்தவர்கள். "மறக்கமுடியாத வண்ணத்துப் பூச்சிகள்"** என்று பின்னர் உலகில் பெயர் பெற்ற இந்த **மிராபெல் சகோதரிகள் இலத்தீன் அமெரிக்காவில் பெண்களுக்கு எதிரான வன்முறைக் கொடுமையின் சின்னமாக** மாறினார்கள்.

1980 ஆம் ஆண்டு முதல் அந்த நாள் அவர்களின் படுகொலையை நினைவு கூருவதற்காகவும், பாலியல் வன்முறைகளுக்கு எதிராக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் தெரிவு செய்யப்பட்டது. அன்றைய தினத்தைத் தொடர்ந்து **16 நாட்களுக்கு பாலியல் வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் செயற்பாடுகள்** முன்னெடுக்கப்பட்டன. இந்தச் செயற்பாடுகள் **சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10** ஆம் திகதி வரை தொடரும்.

பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுப்பாட்டையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கை என்பது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் 1979ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அனைத்துலக உடன்படிக்கை ஆகும். இந்த **உடன்படிக்கை 1981 ஆம் ஆண்டு நடைமுறை**க்கு வந்தது. **உலகளாவிய நோக்கில் பெண்களின் உரிமைகளை இந்த உடன்படிக்கை உறுதி** செய்கிறது.

சமீபத்தில் **பெண்களுக்கு எதிரான வன்முறைகளில்** பெண்கள் வாழ்வதற்கு ஆபத்தான நாடுகள் எவை எனச் செய்தி நிறுவனம் ஒன்று ஆய்வு நடத்தியது இந்த ஆய்வில் **சுகாதாரப் பிரச்சனை, பாலியல் வன்முறை மற்று பாலியல் அல்லாத வன்முறைகள், பண்பாடு மதம் மற்றும் பாரம்பரியத்தின்**

பேரால் தீங்கு விளைவிக்கும் சடங்குகள், பொருளாதார வளம் சரியாகக் கிடைக்காதது, ஆள் கடத்தல் போன்ற பெண்களுக்கு எதிரான ஆறு பிரச்சினைகள் மட்டும் கணக்கில் கொள்ளப்பட்டன. அதில் **ஆப்கானிஸ்தானில் தான் பெண்களுக்கு எதிரான அதிகளவான கொடுமைகள் நடப்பதால், அது பெண்களுக்கான அபாயகரமான நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில்** உள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களைக் களைந்து **பாரதிகண்ட புதுமைப்பெண்ணைப் படைக்க அனைவரும் கைகோருக்க**வேண்டியது எமது கடமையாகும்.

06. "போதைப்பொருளுக்கு எதிரான போக்கு"



உலகளாவியரீதியில் **போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் கடத்தல், போதைப்பொருள் விற்பனை செய்தல்** என்பன ஒரு **முக்கிய பிரச்சினையாக** உருவெடுத்துள்ளது. போதைப்பொருளைக் கட்டுப்படுத்த அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. **போதைப் பொருள் கடத்தலுக்காக சில அரசுகள் மரண தண்டனையைக் கூட சட்டமாக**ப் பிரயோகித்து வருகின்றது. எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும்கூட, **போதைப்பொருளை முற்றாக ஒழித்துவிடமுடியவில்லை.** போதைப்பொருட் பாவனையால் ஏற்படும் தீமைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்ட தினமாகவே **(ஜூன் - 26) உலக போதைப்பொருள் ஒழிப்பு தினம் காணப்படுகின்றது.**

போதைப் பொருட்களை பாவிப்பதனால் **பாவிப்பவர்கள் பல்வேறு கஸ்டங்களுக்குட்படுவதோடு பிறருக்கும் தீங்குகளை விளைவிப்பவர்களாகவும்** மாறுகின்றனர். இன்று வர்த்தக ரீதியில் உலகெங்கும் போதைப் பொருட்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன. அநேகமாக **சட்டவிரோதமான கடத்தல் போன்ற வழிகளிலேயே இவ்வர்த்தகம்** நடைபெறுகின்றது. சில நாடுகளில் **தீவிரவாத நடவடிக்கைகளின் போது ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் போதைப் பொருட்கடத்தல்** மேற்கொள்ளப்படுகின்றன. மிகவும் **திட்டமிட்ட அடிப்படையில் இத்தகைய கடத்தல்கள் மேற்கொள்ளப்படுவதனாலும், இதற்கு உடந்தையாக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சிலர் இருப்பதினாலும் இதனை இல்லாதொழிப்பது ஒரு கடினமான** செயற்பாடாகவே மாறிவருகின்றது.

வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து **போதைப் பொருட்பாவனை பண்டையகாலம் தொட்டே** இருந்து வந்துள்ளதை அறியமுடிகின்றது. **அபின், கஞ்சா, கள்ளு, சாராயம், கசிப்பு, பீடி, சிகரட், சுருட்டு** என்பன மக்களால் பாவிக்கப்பட்டு வந்ததை நாம் தெரிந்து வைத்துள்ளோம். சில சந்தர்ப்பங்களில் **போதைப் பொருட்கள் ஔடதமாகவும்** பாவிக்கப்பட்டது. பொதுவாக **களியாட்ட காலங்களில் மக்கள் போதை தரும் பாணவகைகளையும், புகையிலை வஸ்துக்களையும்** பாவித்தனர்.

ஆனால், **விஞ்ஞான வளர்ச்சி காரணமாக அவை நவீன உருவிலும், இலகுவான தன்மையிலும் தயாரிக்கப்பட்டன. மிகச் சிறிய அளவு பாவிப்பதன் மூலம் அதிகளவு போதை தரக்கூடியதாக** அவை தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், இவை **இலகுவாகக் கடத்தவும் பரிவர்த்தனை செய்யவும் வாய்ப்பாக** அமைந்தன. **மேலைநாடுகளில தயாரிக்கப்பட்ட ஹெரோயின், கொகேய்ன், மர்ஜுவானா, ஹஸீஸ் போன்ற நவீன போதைப்பொருட்களும் மற்றும் குளிசை வடிவத்தில் தயாரிக்கப்பட்ட எல்.எஸ்.டி. தூக்க மாத்திரை போன்ற வஸ்துக்களும் அதிமிகு போதையைத் தரும் மதுபானங்களும், சர்வதேசரீதியில் பல நாடுகளுக்கும்** கடத்தப்படுகின்றன. இதற்கான **சர்வதேச கடத்தல் பாதைகளும்** உள்ளன. **சில நாடுகளின் பொருளாதாரம் போதைப்பொருள்**

வியாபாரத்திலேயே தங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. **ஊசிமூலம் போதைப்பொருளை உடலிற் செலுத்திக் கொள்ளும் பழக்கம், தீவிர பாவனை**யாளரிடையே உள்ளது. இதனால் இப்படிப்பட்டவர்களிடத்தில் **எய்ட்ஸ் வைரசும் தொற்றிக் கொள்ள வாய்ப்பு** ஏற்படுகிறது. இவைகள் பற்றி விளக்கம் வழங்கத்தக்க வகையில் **1988இல் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருளுக்கெதிரான உலக மகாநாடு நடைபெற்றமை** குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகள் நவீன போதைப் பொருட்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழிவகுத்தன. இலங்கையில் போதை பொருட்கள் 1980களில் பரவ ஆரம்பித்தது. இலங்கையில் ஹெரோயின் விற்பனையாளர் முதன் முதலில் 1981 மே 26 இல் 70கிராம் ஹெரோயினுடன் பேருவளையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இலங்கை சுங்கத் திணைக்களம் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான தேசிய அதிகார சபை, குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு உட்பட பல அரச நிறுவனங்களின் உயரதிகாரிகள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் மேற்படி வேலைத் திட்டம் தொடர்பாக அண்மையில் விளக்கமளிக்கப்பட்டது.

போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு **போதைக்கு முற்றுப்புள்ளி திட்டம் மட்டுமே போதுமானதல்ல, சகலரும் பூரண ஒத்துழைப்பின் மூலமே போதைப் பொருள் ஒழிப்பை வெற்றிகரமாக** முன்னெடுக்க முடியும். **போதைக்கு அடிமையானோரை அதிலிருந்து மீட்டெடுப்பது, புதிதாக அப்பாவனைக்கு அடிமைப்படாமல் இளம் சந்ததியினரைப் பாதுகாப்பது** என்ற இலக்கிலேயே அரசாங்கம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது. அதே நேரம் இன்று இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பொறுத்தவரை இந்நடவடிக்கைக்கு அவை போதியதாக இல்லை. உதாரணமாக **ஒரு ஏக்கர் கஞ்சாவைப் பயிரிட்டாலும் 10 ஏக்கர் கஞ்சாவைப் பயிரிட்டாலும் அதற்கான தண்டனை ஒரே விதமாகவே தற்போதுள்ளது** எனவும் கூறப்படுகின்றது.

வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் **ஹெரோயின் ஒரு கிலோ மூன்று மில்லியன் ரூபா** பெறுமதியானது. **ஹெரோயினைப் பொறுத்தவரை 2 கிராமை சுமார் 500 பேர் பாவித்து போதை** ஏற்றிக்கொள்ள முடியும். **வெளிநாடுகளில் வருடாந்தம் இலட்சக்கணக்கானோர் இதனால் பாதிக்கப்பட்டு தண்டனை**க்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

2009 மே மாதத்தில் மாத்திரம் இலங்கையில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 555 சுற்றிவளைப்புகள் இடம்பெற்றுள்ளதாகவும், இதன்போது **1,202 கிலோ கஞ்சாவை குற்றத் தடுப்புப் பொலிஸார் கைப்பற்றி**யுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

world-anti-drugs-day 1984இல் தாபிக்கப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான தேசிய அதிகார சபை போதைப்பொருள் பாவனைக்கெதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அக்கறையுடன் செயல்படுகிறது. **நாட்டைக் குட்டிச் சுவராக்கி, குடும்ப வாழ்வைச் சீரழித்து நாட்டுக்குழைக்கக்கூடிய நல்லவர்களை நடைப்பிணமாக்கியுள்ள போதைப்பொருட்பாவனையை வேரோடு களையவேண்டும். பொதுமக்களின் ஒத்துழைப்பும் விழிப்புணர்வுமே இப்பாவனையை இல்லாதொழிக்கும்.**

போதைப் பொருளுக்குப் பதிலாக போதைக் குறைந்த சில பொருட்களை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளும் சிலநாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கை பலத்த விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ளன. **போதைப்பொருள் பயன்பாட்டை போதைப்பொருளை வைத்தே தடுக்க முயற்சிப்பது இயலாதது என்று திருப்பீடம் சர்வதேச சமுதாயத்தை எச்சரித்து**ள்ளது.

வியன்னாவில் 2009 மார்ச் மாதம் நிறைவு பெற்ற போதைப் பொருள் தடுப்புக்கான ஐ.நா.அவையில் உரையாற்றிய மேய்ப்புப்பணி உதவிகளுக்கான திருப்பீட அவையின் செயலர் ஆயர் ஹோசே லூயிஸ் ரெத்ராதோ மர்க்கித்தே, இந்தப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில்

உலகளாவிய கத்தோலிக்க நலப்பணி நிறுவனங்களின் அனுபவங்களின் அடிப்படையில் பேசும் போது இதனைத் தெரிவித்தார். வீரியம் குறைந்த போதைப்பொருள்களை விநியோகிப்பதை அடிப்படையாகக் கொண்டு மிகவும் வீரியமான போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்குப் பல நாடுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆயர் மர்க்கித்தே தெரிவித்தார்.

போதைப்பொருட் பாவனையானது பொதுவாக சிறுவர் பராயத்தில் ஏற்பட்டுவிடுவதாக சில அறிக்கைகள் கூறுகின்றன. பொதுவாக **பாடசாலைப் பருவத்தில் தீய நண்பர்களின் சகவாசம் காரணமாக** இது ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆரம்பத்தில் **புகைப்பிடித்தலுடன் ஆரம்பமாகும் இப்பழக்கம் படிப்படியாக போதைப் பொருட் பாவனை வரை வளர்வதாக** கூறப்படுகின்றது. பெற்றோர்களுக்கு பொதுவாக தங்கள் பிள்ளைகள் மது அருந்துதல், புகை பிடித்தல் அல்லது போதைப் பொருட்களுக்கு அடிமையாகிவிடப் போகிறார்களோ என்ற ஐயம் இக்காலத்தில் தோன்றுவதற்கு இதுவே மூலகாரணமாகின்றது. இப்பழக்கத்துக்கு மேலைத்தேயம், கீழைத்தேயம் என்று வித்தியாசமிருப்பதில்லை. 2005 இல் அமெரிக்காவில் போதைப்பொருட்கள் உபயோகிப்பதைப் பற்றிக் கண்காணிக்கும் கல்விக்கழகம் மாணவர்களிடையே நடத்திய கருத்துக்கணிப்பின் முடிவுகள் மூலம் 1990 இல் மிகவும் அதிகமான மாணவர்கள் போதைப்பழக்கத்தில் இருந்ததாகவும் அரசாங்கமும் பாடசாலைகளும், சமூகநல அமைப்புகளும் மேற்கொண்ட விழிப்புணர்வு நடவடிக்கையினால் புகைபிடிக்கும் பழக்கம், மற்றும் மது அருந்தும் பழக்கமும் கணிசமான அளவில் குறைந்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுவொரு நேர்மறை விளைவைக் காட்டிநின்றாலும்கூட, **போதைப்பொருட் பாவனை இன்று புதிய வடிவத்தில் மாணவர்கள் மத்தியில் பரவிவருவதும்** சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது, **சில மருந்துவகைகளை மாணவர்கள் போதைக்காகப் பயன்படுத்தி வருவதாக** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மருத்துவர்களால் பரிந்ததுரை செய்யப்படும் **ஆக்சிகோடின், விகோடின்**போன்ற மருந்துகளின் உபயோகம் கணிசமான அளவில் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. **2005 வருட முடிவில் விகோடின் என்ற மருந்தை உபயோகிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 12.5%** சதவிகிதம் அதிகரித்திருந்ததாகவும் சில வகை தூக்கமருந்துகளின் உபயோகம் 25% மாணவர்களிடையே அதிகரித்திருந்ததாகவும் **ஆஸ்த்மாவிற்காகப் பரிந்துரைக்கப்படும் அட்வேர் போன்ற மருந்து பாவனை** (இவை மூச்சிழுக்கப்படும்) அதிகரித்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்து.

போதைப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதைவிட மருந்துவகைகளைப் பெற்றுக்கொள்வது எளிதானதே. தங்கள் பிள்ளைகள் மருந்துவகைகள் அதிகமாகப் பயன்படுத்துகின்றார்களா என்பதையும் பெற்றோர்கள் அவதானிக்க வேண்டிய நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளனர். போதைப் பொருட்களுக்குப் பதிலாக மருந்துப்பாவனை மேற்கத்திய நாடுகளில் அதிகரித்துக் காணப்பட்டபோதிலும்கூட, கீழைத்தேய நாடுகளிலும் இப்பாவனை உருவாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அறிக்கைகளின்படி **தமது பிள்ளைகளிடத்தில் தன்னம்பிக்கை குறைதல், படிப்பு மற்றும் விளையாட்டுக்களில் ஆர்வம் குறைதல், சோம்பல் மற்றும் சற்றே ஆர்வம் குறைந்த தோற்றம், பெற்றோர் அல்லது ஆசிரியரிடம் அதிக வாக்குவாதங்கள் செய்வது** போன்றவை தன்மைகள் காணப்படின் கூடிய விழிப்புணர்வுடன் பெற்றோர்கள் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட நிலையில் **மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் மருந்துகளேயாயினும் அளவுக்கு மீறி எடுத்துக்கொள்வது ஆபத்தில் முடியும் என்பதை பிள்ளைகளுக்கு விளக்க** வேண்டும்.

எனவே போதைப்பொருட்கள் தொடர்பாக **அதிக விளிப்புடனிருந்து எம்மத்தியிலுள்ள போதை எனும் கொடிய அரக்கனை விரட்ட அனைவரும் ஒன்றினைந்து இயங்குதல்** வேண்டும்.

07. "இலக்கியத்தின் சமூகப்பணி"



செய்யுளிலேனும் உரைநடையிலேனும் விரித்து எழுதப்படும் அனைத்தும் இலக்கியம் எனப்படும். **இலக்கியத்தை சமுதாயத்தின் கண்ணாடி என்றும் காலத்தின் கண்ணாடி** என்றும் விதந்துரைப்பர். **ஒரு காலகட்டத்தில் நடக்கும் நிகழ்வுகளை கலை அழகோடு உள்ளத்தைக் கவரக்கூடியதாய் இன்பமான பொழுதைப் போக்கக் கூடியதாய் உருவாக்கப்பட்டவை சிறப்பான இலக்கியம்** என வகுக்கப்பட்டன. **மக்கள் தம்முள் தொடர்பு கொள்ள முயற்சிக்க மொழியும், பின்னர் அதைப் பயன்படுத்த இலக்கியமும்** தோன்றின. தம் **உணர்வுகளை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதலில் தான் இலக்கிய வடிவங்கள்** உருவாகின்றன.

இலக்கியம் **மனிதனுக்கும் உலகிற்கும் இடையே உள்ள உறவுகளின் வெளிப்பாடாக** காணப்படுகின்றன. **அழகியல் இரசனைக்கு** உதவுகின்றது. மேலும் **உலகின் சில குறிப்பிட்ட வர்க்கங்களின் தேவைகள், பிரச்சினைகள் என்பவற்றை மக்களுக்கு தெரியப்படுத்தவும் அவற்றைப் பூர்த்தி செய்யவும், நிவர்த்தி செய்யவும் உதவும் சாதனமாகவும்** இலக்கியங்கள் அமைகின்றன. இலக்கியங்கள் வாழ்க்கை அனுபவங்களினின்றும் பிறப்பது. **கலைஞன் யதார்த்தத்தைத் தன் அகநிலையினூடாகப் பிரதிபடுத்தி அதன் மீது ஆக்கத்தில் ஈடுபட்டுத் தன் கலைப் படைப்புக்களைத் தருகிறான். அவன் வாழும் சமூகச் சூழலைப் பிரதிபலிப்பனவாகவே அவை விளங்கும்** என்பதால் என்றென்றும் அவை எதிர்காலச் சந்ததியினருக்குப் பயன்தரத்தக்கதாய் அமைந்துவிடுகின்றன.

இருபத்தோராம் நூற்றாண்டில் வாழும் இளைஞன், சங்க காலத்து இலக்கியங்களை சுவைக்கும் பொழுது அன்றைய சமுதாயம் எத்துணை சிறப்பானதாகவும், வீரமாகவும் வாழ்ந்தது என்பதை உணருகிறான். **வாழ்க்கை நடைமுறை, பழக்க வழக்கங்கள் யாவும் மாறுபடினும் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுவன இலக்கியங்கள்** என்பதை யாவரும் உணர வேண்டும். மனிதன் **உலகில் வாழப் பணம் தேவைப்படுவது போன்றே இலக்கியம் அவனை நெறிப்படுத்த** உதவுகிறது. அறிவியல், சமய, புராண, இதிகாச இலக்கியங்கள் முறையே **செம்மையாய் உலகில் வாழ, மனிதனை மனிதனாக மதித்து அன்புடன் வாழ, வாழ்ந்து காட்டிய சான்றோரின் வாழ்க்கை அறிவுறுத்தியபடி வாழ வழி** வகுப்பனவாகும். அழகியல் உணர்வை இலக்கியங்கள் எமக்குத் தருகின்றன. இலக்கியங்கள் மனிதனின் **மன வளர்ச்சியில் முக்கிய பங்கு**வகிக்கின்றன. மக்களின் **மன வளர்ச்சியில் வரலாற்றை மாற்றக்கூடியன.** இத்தகைய பெருமை வலிமை பெற்ற இலக்கியங்கள் என்றென்றும் பாதுகாக்கப்பட வேண்டியவை. மனிதனிடத்தே அன்பு, அருள், தியாகம், தன்நல மறுப்பு முதலியவற்றால் உண்டாகும் சீர்திருத்தம் நிலையானதும் பயனுள்ளதும் ஆகும். இதனைத் தரவல்லது இலக்கியம். இவற்றை இன்றைய காலகட்டத்தில் சிறாரிடையே முறைகொள்ள வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதைச் செய்ய வல்லது இலக்கியமே ஆகும்.

இலக்கியங்கள் **மொழியாற்றலை விருத்தியாக்க** உதவுகின்றன. **கலை உணர்வை** ஊட்டவல்லன. மக்கள் **மனதில் அமைதியை சாந்தத்தை** நிலை கொள்ளச் செய்வன. தீமையானவற்றால் ஏற்பட்ட தீங்குகளை மனதில் பதிய வைப்பதால் **சீர்கேடுகளினின்றும் விலக** வாய்ப்பளிப்பன. **சமயம் சார்ந்த அறிவுரையாளரும் இலக்கியங்களின் துணையை நாடியே தமது போதனைகளை**ச் செய்கிறார்கள். இவன் இவ்வாறு வாழ்ந்தான் எனச் சுட்டிக் காட்டி மனதைக் கவரும்படி எடுத்துரைப்பதில் இலக்கியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உலகில் அன்று தொட்டு அழிந்தவை போக எஞ்சிய இலக்கியங்கள் மனிதனை வாழ வழி வகுத்தமையால் மேலும் நவீன இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இவற்றைப் பேணிப் பாதுகாப்பதும், அவ்வழி நடப்பதும் இன்றைய சமுதாயத்தின் கடமையாகும்.

08. "உலகமயமாக்கலும் பண்பாடும்"



இன்றைய யுகம் **தகவல் தொழில்நுட்ப யுகம்** என்று பெருமையாகப் பேசப்படுகிறது. **தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதுடன் தான் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி** பெறத் தொடங்கியதெனலாம். **தொலைபேசி உலகில் மனிதர்களுக்கிடையேயான தூரத்தை இல்லாதொழித்துவிட்டது. இன்று இணையம் அதற்கு வலுவூட்டி**யுள்ளது. இந்த மாற்றத்தினால் உலகம் சுருங்கிவிட்டது எனப்படுகிறது. இத்தகைய மாற்றம் **இனம், மதம், மொழி, நாடு என்ற எல்லைகளுக்கு அப்பாலும் மனிதர்களை இணைப்பதில் வெற்றி**கண்டுள்ளது. இதன் பயனாக **உலகம் கிராமம் (Global Village) உலகமயமாக்கல் (Globalization)** போன்ற கருத்துக்கள் வலுப்பெற்று வருகின்றன. **மனிதன் ஒரு சமூகப் பிராணி அவன் ஒரு சமூகமாக வாழ்வதனால், அவனுக்கென ஒரு பண்பாடும் தோன்றியது** எனலாம். **ஒரு கூட்டமாக வாழ்ந்த மனிதன், தனக்கெனச் சில ஒழுங்கு முறைகளையும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் தோற்றுவித்து, அவற்றை காலங்காலமாகப்பின்பற்றி வந்தபோது ஒரு பண்பாடு உருவாயிற்று** எனலாம். இவ்வாறாக ஒவ்வொரு மக்கட் கூட்டத்தினரதும் தனித்துவமான அடையாளமாக விளங்குவது பண்பாடாகும்.

உலகமயமாதல் என்ற எண்ணக்கரு உதயமானதன் மூலம் இன்று பண்பாட்டுத் தனித்துவம் என்பது கேள்விக்குரியதாயிற்று. உலக மக்களிடையேயான தொடர்புகள் அதிகரிக்கத் தொடங்கிய போதே பண்பாட்டுத் தனித்துவம் பேணுதல் பற்றி உலகின் பல சமூகங்களும் அதிகமாகச் சிந்திக்கத் தொடங்கின. காரணம் **உலகமயமாக்கல் காரணமாக உலக மக்களிடையே ஏற்பட்ட அதிகரித்த தொடர்பானது ஒரு நாகரீகப் பரிமாற்றத்திற்கு வழிவகுத்தது.** கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற பாவனையில் இன்று எமது இளைஞர்களும் யுவதிகளும் ஆடையலங்காரங்களில் ஈடுபட்டிருப்பது இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். **உலகம் ஒரு பல்லினப் பண்பாட்டை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதனை**யே இது காட்டி நிற்கின்றது.

கீழைத்தேய நாடுகளைப் பொறுத்தவரை **இப்பல்லினப் பண்பாட்டின் காரணமாக சமூக பொருளாதார நிலைகளில் சில நன்மையான அம்சங்கள் ஏற்பட்டாலும் கூட, கீழைத்தேய அடிப்படைச் சிந்தனைகள் கொண்ட மக்கள் மேலைத்தேய நடைமுறைகளுக்குள் திடீரென விரைவாகப் பிரவேசிக்கும் போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் மிகவும் மோசமானதாக** இருக்கும். இத்தனைக்கும் மத்தியில் உலகமயமாக்கலினால் ஏற்படக்கூடிய மிகப் பாரிய தாக்கங்களுள் ஒன்றான பல்லினப் பண்பாட்டின் மத்தியிலே ஒவ்வொரு சமூக்க குழுக்களுக்கும், தலைவர்களுக்கும், அரசுகளுக்கும் முன்னே மிகப்பாரிய பொறுப்பு ஒன்று உளது. **உலகமயமாக்கலினால் தத்தமது சமூகத்தில் ஏற்படக்கூடிய பல்லின பண்பாட்டின் தாக்கங்களை வேறு பிரித்தறிவதும் சாதகமானவற்றைத் தமது சமூக நலைகளுக்கோ உள்ளீர்த்துக்கொள்வதும் பாதகமான விடயங்களை உட்புகவிடாமல் தடுத்தலுமே** அதுவாகும்.

09. "சமய நல்லிணக்கம்"



பண்மைச் சமூகங்களில் பல சமயங்களை பின்பற்றுவோர் காணப்படுகின்றனர். இவர்கள் மத்தியில் **அன்றும் இன்றும் சமயப் போர்கள் நிகழ்ந்துள்ளமைக்கு வரலாறுகள்** சான்று பகிர்கின்றன. இன்றும் சமயப் பூசல்கள் காணப்படுகின்றன. இவை மூலம் ஏற்படும் அழிவுகள் தவிர்க்கப்பட வேண்டுமாயின் சமய

நல்லிணக்கம் அவசியமாகும். **பல சமயத்தவரும் பிறர் சமயக் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நடப்பதுடன் புரிந்துணர்வுடன் தத்தம் சமயக் கருத்துக்களை பரிமாற்றம்** செய்து கொள்ள வேண்டும்.

சமயமானது **மனிதர்கள் அறிவுவிளக்கம் பெற்று உறுதி, இன்பவாழ்வு அடைவதற்குச் சாதகமாயுள்ளது**. சமய நம்பிக்கை மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதது. சமய நம்பிக்கை மனிதனுக்கு **வாழ்க்கையில் ஓர் உயர்ந்த குறிக்கோளை** அளிக்கின்றது. வாழ்க்கைக்குச் சமய நம்பிக்கை ஒரு **பற்றுக்கோடாகவும்** அமைந்துள்ளது. சமயத்தில் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு இசைவாக வாழ்தலே சமயவாழ்க்கை. **மக்களைச் செந்நெறிப்படுத்தச்** சமயம் உறுதுணையாகின்றது. **சமயம் தனிமனிதனது வாழ்க்கையை மாத்திரமன்றி முழுச்சமுதாயத்தின் வாழ்க்கையையும் நெறிப்படுத்து**கின்றது. சமய நல்லிணக்கம் மூலம் இது சாத்தியமாகும். **சமயக் கோட்பாடுகளுக்கமைய மக்கள் தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் சமுதாயம் உயர்வடைகின்றது.** அதனால் நாடே உயர்வடைகின்றது.

சமயங்கள் மனித தர்மத்தை, அர்த்தமுள்ள வாழ்க்கையைக் காண வழிப்படுத்துபவை, பணத்தினால் எதையும் சாதிக்க முடியாது. **பொன்னும் பொருளும் வாழ்க்கையையின் உறுதிப்பொருட்கள் அல்ல என்ற உண்மையை எவனொருவன் உணர்கிறானோ சமயி** ஆகின்றான். மனிதன் பொருள் என்ற பொருளாதாரத் திட்டத்தையும், அருள் என்ற ஆத்மீகத் தேட்டத்தையும் அடையும் முயற்சிக்குச் சமயங்கள் காலந்தோறும் துணைநிற்கினறன. இத்தகைய சமயங்கள் **வேற்றுமையில் ஒற்றுமை காணும் மண்ணில் நல்லவண்ணம் வாழவும்** இன்றியமையாதது. மனித வரலாற்றை ஒருகணம் திரும்பிப்பார்க்கவேண்டும். **புராதன கலாச்சாரங்களிலிருந்து இன்றுவரை மனித இனம் வளர்ந்து வந்த பாதையைப் பார்த்தால் சமயம் எவ்வளவு தூரம் வாழ்க்கை ஓட்டங்களில் ஒவ்வொரு கணத்தையும் பாதித்துள்ளது** என்பதை உணரமுடியும்.

மனித வரலாற்றையும் வாழ்க்கையையும் விளங்கிக் விளங்கிக்கொள்வது அவசியமானதாகும். **உலக நாடுகள் ஒவ்வொன்றினதும் கோட்பாடுகள் நம்பிக்கைகளில் சமயத்தத்துவங்கள் உயிர்நாடியாக சரடாகப் பின்னிப் பிணைந்து**ள்ளது. ஆனால் **சமய நல்லிணக்கம் இன்மையால் நாடுகளிடையே போட்டியும் போர்கள் நடைபெற்றமையை மறுப்பதற்கில்லை**. எனவே சமயக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். சமயம் என்பது வாழ்க்கை நெறி, மாணவர்கள் சமுதாயத்தில் சீராக வாழ்வதற்கு வழிகாட்டுவது சமயம். மாணவர்கள் மாணவப் பருவத்திலே அறிவையும் பயிற்சியையும் பெற்றுக்கொள்ள வேண்டும். **மாணவர்கள் மனிதர்களாகச் சமுதாயத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு சமுகக் கட்டுப்பாடுகள், சமூக விழுமியங்கள், பண்பாடுகள் என்பவற்றை உணர்ந்து சமூகத்தின் பொருந்தி வாழ்வதற்கு சமயம் உதவவேண்டும்.**

இவை சிறப்பாக செயல்பட வேண்டுமாயின் சமயங்களிடையே நல்லிணக்கம் அவசியமாகும். இத்தகைய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் சமய நிறுவனங்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

10. அழகியற்கல்வியின் அவசியம்



அறிவுத்திறன் மிக்க, ஆன்மீக பண்புகள் நிறைந்த, வாழ்க்கைக்குகந்த மனப்பாங்குகளையுடைய, நல்லொழுக்கம் கொண்ட மனிதனை உருவாக்குதலே கல்வியின் நோக்கமாகும். அதற்காகப் பிள்ளையினது **அறிவு, மனவெழுச்சி, உளவியக்கப் பரப்புகள் ஆகியவற்றை விருத்தி**யடையச் செய்ய வேண்டும். அழகியற்கல்வி மூலமாக **உள இயக்கப்பரப்பு விருத்தியடைவது மட்டுமன்றி, மாணாக்கரிடம் சிறந்த மனப்பாங்குகளும் சூழலை மதிக்கத்தக்க, சமூகத்திற்கு உகந்த, பண்பட்ட நற்பிரசைகளின் உருவாக்கத்திற்கும் காரணமாக** அமைகிறது.

அழகியலுக்கும் கலைஞனுக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு. **கலைஞன், சமூகத்தில் காணப்படும் உண்மை நிகழ்வுகளிலிருந்து தான் பெற்றுக் கொள்ளும் பலவித அனுபவங்கள் கருத்துச் செறிவுடைய கலைவடிவமாக்கித் தருகின்றான்.** அவனது இரசனையும், அவன் பெற்ற அனுபவமும் அவனது ஆக்கத்திலிருந்து இரசிகனால் கிரக்கித்துக் கொள்ளப்படுகின்றது. இதனால் இரசிகனின் இரசனை உணர்வு மேலும் விருத்தி அடைகின்றது.

இயற்கையிலும் செயற்கையிலும் உள்ள அழகினைக் கண்டு களிப்பதற்கு அழகியற்கல்வி. மாணாக்கர்களைத் தூண்டுகிறது. அத்துடன் அவனது **இரசனைத்திறன் பயனுள்ள வகையில் கூர்மையடைவதற்கு வழிகோலுகின்றது**. சூழலின் அடிப்படையில், மனதில் ஒருமைப்பாடு தோன்றி மனதில் பலவித கற்பனைக் காட்சிகள் தோன்ற முடியும். **சுவையை அனுபவிக்கும் ஆற்றல் பெற்ற ஒருவன், தான் கண்ட அழகினை அனுபவித்து, அந்த அழகினை மனப்பாடமாக்கிக்கொள்ளுவதற்கு, அவனுடைய மனத்தை ஒருநிலைப்படுத்தும் திறன் காரண**மாகின்றது. இது பின்னர் ஆக்கத்திறன் கருவாகின்றது. சிலருடைய ஆக்கங்கள் சாந்தமான, சலனமற்ற தன்மையுடன் காணப்படும். இதற்குக் காரணம் அவரவர் இரசனை அனுபவங்களின் இயல்பாகும்.

சுவைக்கும் திறன் இயல்பாகவே மனிதனுக்குண்டு. ஒருவனின் நுகர்திறன் அடிப்படை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரும் வேறுபடும். **"இன்பநுகர்வின் போது ஆக்கம் பிறக்கிறது"** என **சிசில் டேலுவிஸ்** என்பவர் கூறுகிறார். **கவிதை, பாடல், நடனம், சித்திரம், சிற்பம்** போன்றன இத்தகைய ஆக்கங்களாகும். **சித்திரமென்பது கோடுகளினால் அமைக்கப்பட்ட ஒரு கோலமாகும். சிற்பம் கல் அல்லது வேறு ஊடகங்களினால் ஆக்கப்பட்ட உருவமாகும். கவிதை, பாடல் என்பன ஒரு குறிப்பட்ட ஒழுங்கு தாளத்திற்கேற்ப ராகத்தையும் பாவத்தையும் வெளிப்படுத்து**வதாகும். நாடக வடிவங்களும் இதனுள் அடங்கும்.

முற்கால வாழ்க்கை முறைமையினை ஆராயும் போது, கலையானது வாழ்க்கையுடன் இணைந்ததொன்று என்பது புலனாகின்றது. **ஓய்வில்லாத மனத்தாக்கங்கட்கு உட்பட்டு, இயந்திர வாழ்க்கை வாழும் நவீன சமூகமானது ஆறுதலைப் பெற்றுக் கொள்ளும் ஒரே ஒரு ஊடகம்** கலையாகும். **இரசனை பற்றி அறிந்துள்ள ஒரு மனிதன் முரட்டுத் தன்மைகளைக் கொண்டிருக்க மாட்டான். அவனுடைய நடையுடை பாவனை அழகாக இருக்கும். அழகியல் பற்றிய அறிவு அவனை வளப்படுத்தும்.** இரசனை அனுபவத்தை நாம் எதிர்காலப் பரம்பரையினருக்கும் வழங்க வேண்டும். **தேசிய உணர்வுள்ள ஒருவனை உருவாக்க, வீட்டுச் சூழலில் தொடங்கி, பிள்ளையின் மனதில் ஏற்பட்ட இந்த இரசனை உணர்வு பயன்படுகின்றதென** உளவியலாளர்கள் கருதுகின்றனர்.

பிள்ளையின் **ஐம்புலன்களுக்கும் இதமூட்டக்கூடிய விதமாக, அவர்களுடைய எண்ணங்கள், கருத்துக்கள், அறிவு என்பவற்றைத் தூண்டத்தக்க கலையாக்கங்களின் மதிப்பினைப் பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்ட** வேண்டும். ஒருவனின் உடல் உறுப்புகள் மாத்திரம் வளர்ச்சி அடைவதன்றி, **உள்ளமும் பண்பட அழகியற்கல்வி** பெரிதும் உதவும். அழகியற்கல்வி மூலம் சிறந்த இரசனை அனுபவத்தை பெற்ற மனிதன், **கடமைகளை மதிப்பவனாக இருப்பான், சமாதானப் பிரியனாக இருப்பான், மனக்குழப்பங்கள் அற்றவனாக இருப்பான், அறிவு வளர்ச்சி பெற்றதுடன் நல்லெண்ணங்களைக் கொண்டவனாகவும்** இருப்பான். இப்பண்புகள் **உயர் ஆக்கங்கள் தோன்ற** வழிவகுக்கும். ஒருவனது **தனிப்பட்ட எண்ணங்கள், சிந்தனைகள் என்பன சிறந்து** விளங்கும். இத்தகையோரைக் கொண்ட உலக சமாதானம், அன்பு ஆகியவற்றைக் கொண்டு விளங்கும். அத்துடன் மனிதனின் உடலமைப்பும் மேம்படும்.

சுழலும் சக்கரம் போல, என்றும் ஒரே மாதிரியான வாழ்க்கையை அனுபவிக்கும் மனிதன் அழகியல் இரசனையனுபவம் மூலமாகத்தான் ஆறுதல் பெறுகின்றான். அழகியல் என்பது வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணி போன்றது. **அச்சாணி அல்லாத வண்டி குடைசாய்வது போல அழகியல் சுவை**

காணா மனிதன் இயந்திரமாகி மனிதாபிமான மற்றவனாய் இருளில் தள்ளப்படுகின்றான். ஒருவன் பெறும் **அனுபவம் மகிழ்ச்சிகரமானதாகவோ, துக்ககரமானதாகவோ இருக்கும். இவ்வனுபவம் அவனிடத்து ஓர் இரசனையை ஏற்படுத்தும். இவ்விரசனையின் மூலம் ஏற்படும் கற்பனையின் முடிவில் ஆக்கம்** ஒன்று உருவாகும். அது பாடல், நடனம், சித்திரம், சிற்பம் என்பவற்றுக்கு ஆரம்பமாகலாம்.

அழகியல், ஆக்கற் செயற்பாட்டுக்கல்வியின் மூலம், வேறெந்த பாடங்களினாலும் பெறவியலாத விருத்தியைச் சிறப்பாகப் பெறலாம். **அழகியற் கல்வியானது** வெறுமனே கொள்கை ரீதியில் போதிக்கக் கூடியதன்று. அது **அவதானிப்பு, பரிசோதனை, பயிற்சி, ஆக்கம், நுண்நோக்கு** என்பவற்றினூடாக மாணாக்கன் தான் வாழும் சுற்றாடலைக் காண உதவுவது. இதற்கேற்ப, அழகியற்கல்வியானது சகல பாடங்களினதும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள ஊடகமாக அமையும் ஓர் உன்னதமான பாடமாகும். ஆக்கச் செயற்பாட்டிலேற்படும் ஆக்கத்திறனுக்கான அடித்தளத்தையும் அதனூடேயே ஏற்படுத்திக் கொள்ளவியலும் அவ்வாறே கற்றலுக்கு அவசியமான ஊக்குவிப்பையும் புத்தாக்கத்தையும் இலகுவாக ஏற்படுத்திக் கொள்ளவியலும்.

11. "தொலைக்காட்சிப் பயன்பாடுகளு ம் துஷ்பிரயோகங்களும்"



விஞ்ஞான உலகம் பெற்றுத்தந்த வியத்தகு சாதனங்களுள் தொலைக்காட்சியும் ஒன்றாகும். **அறிவு வளர்ச்சிக்கும், ஓய்வு நேரப் பயன்பாட்டுக்கும் உதவும் ஓர் அரிய பொக்கிஷம்** எனலாம். **கலை பண்பாட்டு நிகழ்ச்சிகள், விஞ்ஞான விந்தைகள்** என்பனவற்றை எல்லாம் வீடுகளில் ஓய்வாக இருந்தபடியே கண்டு களிக்கலாம். ஆரம்பத்தில் கறுப்பு வெள்ளை பின் நிறங்களில் வந்தவை, தற்போது தத்ரூபமாகப் பார்க்கக் கூடியதாக ஒளிபரப்பாகிறது.

பிறநாடுகளின் மொழி, கலை, கலாசார பண்பாடுகளை, நாடகம், படமோ, கலை நிகழ்ச்சிகள் மூலம் ஒப்பிட முடிகிறது நயக்கமுடிகிறது. சிறுவர் முதல் முதியோர் வரை மிக்க பயனைப் பெறுவதற்கு அரிய வாய்ப்பாகத் தொலைக்காட்சி அமைந்துள்ளது. எமக்குத் தருவதால் அறிவைப் பெறமுடிகிறது.

ஐவகைக் கலைகளின் அன்றைய இன்றைய நிலைகளை அந்தந்த இடங்களின் **கலைப் பொக்கிஷங்களையே ஒளிப்பதிவு செய்து காட்டுவதும், அதிசயங்களைக் கண் முன்னே கொண்டு வருவதும், இயற்கை அனர்த்தங்களை அந்ததந்த நிகழ்வு நடக்கையிலேயே பதிவு செய்து ஒளிபரப்புவதும், விண்வெளிப் பிரயாணங்கள், விண்வெளியில் நடக்கும் அனர்த்தங்கள், வெற்றிகள் யாவுமே ஒளிபரப்புவது** மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமே. அண்மையில் சீன விண்வெளிவீரர் விண்வெளியில் நடந்ததைக் கூடக் கண்ணால் வீட்டிலிருந்தபடியே உலக மக்கள் பார்வை இட்டனர். **நேரலை ஒளிப்பரப்புகள்** மூலம் **விளையாட்டுகள், சமய நிகழ்வுகள், ஒலிம்பிக் போட்டி, உலக அழகித் தெரிவு, மலையேறல், ஆழ்கடல் ஆராய்ச்சிகள்** என்பனவும் வியக்கத்தக்கவையே. **விஞ்ஞான உலக நிகழ்ச்சிகள் மூலம் மரங்கள், மீன்கள், பறவைகள், மிருகங்கள்** எனப் பற்பலவற்றைக் காண வாய்ப்பு உள்ளது. சிறுவரைப் பொறுத்த அளவில் அவர்களை ஈர்க்கும் **சிறுவர்களுக்கான கதைகள், நாடகங்கள், விளையாட்டுக்கள்** என்பனவும் அவர்களே பங்கு பெறக்கூடிய நிகழ்ச்சிகளும் ஒளிப்பரப்பாகின்றன.

இத்தனை நல்ல பயன்பெறக் கூடிய தொலைக்காட்சிகள் **விளம்பரங்களையும் கவர்ச்சிக்கரமாக**ச் செய்துள்ளது. அதேவேளை விளம்பரம் மூலம் **பெண்களையும் துஷ்பிரயோகம்** செய்கிறது. **பெண்களை மலினப்படுத்துவதான காட்சி**களை ஒளிபரப்புவது கவலைக்குரியது. சில நடன நிகழ்ச்சிகளில் **இளம் பெண்களின் ஆடைக் குறைப்பு, ஆண்களுடன் பழகும் விதம்** என்பன

அருவருக்கத்தக்கதாகவும், எதிர் காலச் சிறுவர் மனநிலையில் தப்பான எண்ணங்கள் உருவாக்கக்கூடியதாகவும் உள்ளன.

ஒளிபரப்பாகும் **நாடகங்களும் தரக்குறைவானவை**யாகவே உள்ளன. **ஒரு நல்ல கருத்தைத் தரவல்ல தாகவோ, சிந்தனைக்கு ஏற்றதாகவோ, சமுதாயத்தை மேம்படுத்துவதான கருத்தைக் கொண்டதாகவோ அமைவதில்லை**. மேலும் **கொலை, கொள்ளைச் சம்பவங்களை, உண்மையில் நடந்தவற்றை அவ்வாறு காட்டுவதும் தப்பானதே.** கொலை, கொள்ளை முயற்சிகளைக் காட்டும் போது சிறுவரோ எவரோ அவ்வாறே முயற்சி செய்வதற்குத்தூண்டி விடலாம்.

மேலும் **இனத்துவேஷமான சொற்பிரயோகங்கள், சமய ரீதியிலான இழிவான செயல்களைக் காட்டுதல், கடவுளின் கடவுள் உருவங்களை ஏளனம் செய்தல் துஷ்பிரயோகங்கள்** இவற்றை தவிர்த்து நல்ல எண்ணங்களை மக்களிடையே பரப்பக்கூடியதான நிகழ்ச்சிகள், ஒளிபரப்பாவது எல்லோராலும் விரும்பத்தக்கதே ஆகும்.

12. "பன்மொழியாற்றல்"



பன்மொழி ஆற்றல் என்பது **பல மொழிகளிலும் அறிவு ஆற்றல் பெற்றிருப்பது** ஆகும். ஒவ்வொருவரும் தத்தம் **தாய்மொழியை விட வேறு மொழிகளில் தேர்ச்சி பெற்றிருப்பது பல வகைகளில் நன்மையை**த் தரும். இலங்கையைப் பொறுத்த அளவில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இலங்கையர் நிச்சயம் அறிந்திருத்தல் மிக அவசியம். கிராமங்களில் மட்டுமே முடங்கிக்கிடந்த காலம் மலையேறிவிட்டது என்று கூறுவது மிகப் பொருத்தம். பாடசாலைகளில் இன்று **தாய்மொழியுடன் இரண்டாம் மொழியாக சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தையும் மேலதிகமாகத் தொடர்பாடல் மொழியாகத் தமிழ் மாணவர் சிங்கள மொழியையும், சிங்கள மாணவர் தமிழ் மொழியையும்** கற்றல் வேண்டும். இதனால் மூன்று மொழிகளிலும் மொழியாற்றல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

பல மொழிகளில் உரையாட எழுத வாசிக்கத் தெரிதலால் மக்களிடையே புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அயலவருடனோ அல்லது பிரயாணத்தின் போது சந்திப்பவருடனோ ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் உரையாட வேண்டிய வேளைகளில் மொழி தெரிந்த ஒருத்தர் **இலகுவில் தனது தேவைகளைப் பெற்றுக் கொள்ள** முடியும். அதேவேளை அடுத்தவரின் **சந்தேகங்களைத் தீர்க்கவோ தேவைகளுக்கு உதவவோ** முடியும். நிச்சயமாக ஒவ்வொருத்தரும் சர்வதேச மொழியைக் கற்று தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம். **உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ சர்வதேச ரீதியிலான தொடர்புகளை, வங்கித் தொடர்புகளை, வர்த்தக தொடர்பு**களையும் வேறு பல்வேறுபட்ட விடயங்களுக்கான தொடர்புகளை ஏற்படுத்த சர்வதேச மொழி ஆற்றல் அவசியம்.

பிரயாணச் சீட்டுகள், அறிவிப்புப் பலகைகள், விசாரணைகள், திடீர் அறிவிப்புக்கள், பாதுகாப்பு அறிவிப்புக்கள், பாதுகாப்பு எச்சரிக்கைகள் என்பவற்றை வாசித்து அறியவோ, செவி மடுக்கவோ, மற்றவரிடம் கேட்டு அறியவோ சர்வதேச மொழி நிச்சயம் உதவி செய்யும். இளம் சந்ததியினர் பன்மொழி ஆற்றல் பெற்றிருப்பதால் வாழும் நாட்டிலே பலருடம் உரையாடவும் சில பல தகவல்களைப் பெறவும் பெரும் உதவியாக இருக்கும். **உத்தியோகம் செய்பவர்கள், கணினித் துறையில் இருப்பவர்கள், தொடர்பாடல், ஊடகத்துறை, வங்கி கல்வித்துறை என்பவற்றில் நிச்சயமாகப் பன்மொழி ஆற்றல் உடையவர் நன்கு முன்னேற வாய்ப்பு**கள் உண்டு.

மேலும் **அடுத்த மொழி பேசுபவரின் மதம், கலை, இலக்கியங்கள் பற்றிய அறிவைப் பெறவும் மொழியின் தேர்ச்சி அவசியம்**. இலகுவாகவே நாம் பத்திரிகைகள் மூலம் பலவிதமான செய்திகளை மொழித் தேர்ச்சிகள் மூலம் பெறமுடியும். **ஒரு நாட்டின் பிரஜை ஒருவனுக்கு நாட்டில் உள்ள மொழிகளில் தேர்ச்சி இருப்பின் எந்த இடத்திற்கும் செல்லவும், எந்த நபருடனும் உரையாடவும், எந்த தகவல்களையும் வாசித்து அறியவும் முடியும்**. எனவே அந்த நபருக்கு சுய நம்பிக்கை ஏற்படுகிறது. நிச்சயமாகப் **பன்மொழி ஆற்றல் ஒருவனின் ஆளுமை விருத்தியை** ஏற்படுத்துகிறது என்றே கூற வேண்டும். நிச்சயம் ஒவ்வொருத்தரும் பன்மொழி ஆற்றலைப் பெற்றிருப்பது அவசியம்.

13. "விஞ்ஞான வியப்புகள்"



இன்றைய மனிதன் உலகை வேகமாக இயக்கிக் கொண்டிருக்கிறான் என்றே கூறவேண்டும். **ஆதி காலத்திலிருந்து மனிதனது அபார சிந்தனை சக்தியால் உருவானதே விஞ்ஞானம்** வியப்புகள். இன்று நாம் அனுபவிப்பவை யாவும் விஞ்ஞானத்தால் தான் உருவானவையே. காலாகாலம் மனிதன் **ஏதோ ஒரு உந்து சக்தியால் தன்னை வருத்தியோ, பிறரின் எதிர்ப்புகளின் மத்தியிலோ, கடின ஆராய்ச்சியின் விளைவாலோ பலவற்றைக் கண்டுபிடித்து**ள்ளான்.

இன்றைய உலகில் நாம் நடப்பதும் சுவாசிப்பதும் மட்டும் தான் எம்மால் செய்வது என்று கூட நினைக்க வைத்துள்ளது விஞ்ஞானம். வீட்டிலே **ஒளி, ஒலி, இயக்கம்** யாவும் விஞ்ஞானத்தாலானவை. **சமையல், போக்குவரத்து** தொடர்பாடல் யாவும் விஞ்ஞானமயம். அவை இன்றி நாமில்லை என்ற நிலைதான். தகவல் தொழில்நுட்பம் சகல துறைகளிலும் செல்வாக்கு செலுத்துகிறது. **மிகமிக இலகுவாக, விரைவாகப் பல இடங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள இணையம்** உதவுகிறது. ஆங்கிலத்தில் மட்டும் தொடர்பாடக்கூடிய நிலை மாறித் தமிழிலும் தொடர்பாடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

மனிதன் படைப்பின் மணிமுடியாய் விளங்குபவன். எந்த உயிரினங்களுக்கும் இல்லாத சிந்தனை ஆற்றல் மனிதனுக்கு உரிய இருக்கிறது. அந்தச் சிந்தனையின் ஆற்றல் மனிதன் இடைவிடாது முயன்று பலப்பலவற்றைக் கண்டு, அவற்றைக்கொண்டு **பெரிய உலகத்தைச் சுருக்கிவிட்டான். பல மணிநேரம் செய்யவேண்டிய செயல்களைச் சிலமணி நேரத்தில் செய்து முடிக்கின்றான் தூரத்தைக் குறுக்கிட்டான் நேரத்தைச் சுருக்கி விட்டார் மூட கருத்தாலும் கடுமையான நோய்களாலும் மாண்டு கொண்டிருந்த மக்களை நீடு வாழ செய்து**விட்டான். **இன்னா உலகத்தை மானிடன் அறிவியல் கண்டு பிடிப்புகளால் இனிய உலகமாக்கி**க் கொண்டு வருகிறார்.

நிலநடுக்கத்தால் ஏற்படும் அழிவைச் சில நாள்களில் சீர்திருத்தி விடுகிறான். மின்சாரம் மனிதனுக்கு ஏவலனாகிவிட்டது. **மனிதன் நோய் தீர்க்கும் மருந்துகள் கண்டுபிடித்து கொண்டிருக்கிறான். நோய்கள் வராதவாறும் பரவாதவாறும் தடுக்கிறான். ஜென்னர் என்பவர் அம்மை நோய்க்கு அம்மைப் பாலைக்** கண்டுபிடித்தார். **ஜேர்மனி நாட்டு மருத்துவரான டாக்கடர் சோக்கு** என்பவர், ஐம்பதாண்டுகளுக்குமேல் உழைத்து, **காசநோய்க்குக் காரணமாக கிருமிகளையும் கக்கல் காய்ச்சலுக்கு காரணமான கிருமிகளையும் பிளேக் என்னும் கொள்ளை நோய்க்குக் காரணமான கிருமியையும் தூக்க நோய்க்கு காரணமான கிருமியையும்** கண்டுபிடித்தார். பின் வந்தவர்கள் அக்கிருமிகளை அழித்து நோய் நீக்கும் மருந்துகள் கண்டுபிடித்தார்கள்.

ஆதிமனிதன், ஆற்றைக்கடக்க இயலாமல் இருந்தான் நெடுந்தொலைவு போக மாட்டு வண்டியை யோ, குதிரை வண்டியையோ பயன்படுத்தினான். **ஜார்ஜ் ஸ்டீவன்சன் நீராவியால் ஓடும்**

இழுவை வண்டியைக் கண்டுபிடித்தார். **காற்றையும் கடலையும் கடக்க நீராவிக் கப்பல்** கண்டு பிடிக்கப்பட்டன. **ரைட் சகோதரர்கள் வானத்தில் பறந்து செல்ல வானவூர்தியைக்** கண்டு பிடித்தார்கள். மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டது. **எடிசன் தந்தி அடிப்பதை கண்டு** பிடித்தார். **ஊமைத் திரைப்படத்தைக்** கண்டு பிடித்தார். **மார்க்கோனி ஆகாயத் தந்தியையும் அலெக்ஸாண்டர் கிரஹம்பெல் என்பவர் தொலைபேசியை கண்டு** பிடித்தார்கள். **தொலைக்காட்சியை கண்டுபிடித்தவர் லோகி பெர்ட்டு** என்ற ஆங்கில அறிஞர். இவ்வாறு அறிவியல் உதவியால், அச்சுத் துறையிலும் வேறு பல துறைகளிலும் பற்பல கண்டுபிடிப்புகள் தோன்றலாயின. **அமெரிக்காவிலும் ஆசியாவிலும் சந்திரனுக்கே ஆள் அனுப்பி அதை ஆராய்ச்சி** செய்துவிட்டார்கள். நிலாவில் 15 நாள் இரவும் 15 நாள் கடுமையான வெயிலும் இருக்கின்றன என்றும் இதில் எந்த உயிரும் வாழ்வது இயலாது என்றும் தெரிந்து கொண்டார்கள்.

ஆனால், அறிவியல் வளர்ச்சியால் **கடுமையான அணுகுண்டுகளும் ஏவுகணைகளும்** கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. இவை சில நாடுகளில் மக்கள் கூட்டத்தையே அழித்துவிடும். இவற்றால் இன்று மனிதனைக் கண்டு மனிதனே அஞ்சும் நிலை ஏற்பட்டுவிட்டது. பற்பல நகரங்களில் **ஆலைகளினால் தூய காற்று நச்சுக்காற்றாக மாறி** வருகிறது. ஆற்று நீரும் கடல் நீரும் நச்சு நீராக மாறும் நிலையம் ஏற்பட்டுவிட்டது. சூழ்நிலைக் காற்றாலும் வீதிகளிலிருந்தும் காற்றிலிருந்தும் வரும் தாசுகளினாலும் மக்கள் பல நோய்களுக்கு இதையாகின்றார்கள். இவை அறிவியலால் ஏற்பட்டுள்ள தீய விளைவகள்.

மேலும் அணுசக்தியை இன்று பயன்படுத்துவதற்காக நாடுகளிடையே ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. **நீர் மின் சக்தியைப் பயன்படுத்திய மனிதன் இன்று சூரிய சக்தியையும்** பயன்படுத்துகிறான். **யப்பானின் விஞ்ஞான முயற்சிகள் வியக்கத்தக்க**வை. **மிகச் சிறிய அளவிலான கணினி, புகைப்படக்கருவி, தொலைக்காட்சிக் கருவிகள்** என்பனவும் இன்னும் பல ஆக்கங்களையும் உலகிற்குத் தந்துள்ளது. **சூரியசக்தியில் இயங்கும் கணினிப் பொறி. மின்விளக்கு, வீட்டுப்பாவனைப் பொருட்கள்** என்பனவும் விஞ்ஞான வியப்புகளே.

மனிதன் இயற்கையிலிருந்து சக்தியைப் பெற்று அதனையும் விந்தை ஆக்குகிறான். **மின்னலையும் கைக்குள் அடக்கிவிட்டான். கவிஞரின் கற்பனை இன்று உண்மையாகிய நிலை**யைக் காணமுடிகிறது. அபாரசக்தி கொண்ட **மின்னலின் சக்தியால் மின்சக்தி பெற ஆராய்ச்சிகள்** மேற்கொள்கிறான்.

நீரின் சக்தியைக் கொண்டு மின்சாரத்தை உருவாக்கியவன் இன்று அனலைக் கொண்டு மின்சாரம் இயக்க ஆலைகளை உருவாக்கி வருகிறான். பூமியில் பெரும் சாதனைகளை நிலைநாட்டிய மனிதன் விண்ணை நோக்கிய ஆராய்ச்சியையும் நடாத்துகிறான். சந்திரனில் காலடி வைத்ததுடன் தன் முயற்சியை நிறுத்தவில்லை. செவ்வாய் கிரகத்திலும் ஆராய்ச்சி செய்தான். **கோள்களின் நிலை இயக்கம், புதிய கோள் கண்டுபிடிப்பு** என்பனவும் மேற்கொண்டான். **ஒன்பது கோள்களில் புளூட்டோ இன்று நீக்கப்பட்டதும் மனிதனின் விஞ்ஞான அறிவே. செய்மதிகளை அனுப்பி தகவல்களைப் பெறவும், வானிலைகளை அறியவும் செய்திகள் பெறவும் வழி**வகுத்தான். செய்திகளால் இன்று உலகில் போக்குவரத்துத்துறையும் பல நன்மைகளைப் பெற்றுள்ளது.

விஞ்ஞான வியப்புக்கள் எனும் பொழுது வைத்தியத்துறையில் ஏற்பட்டவற்றை மறக்க இயலாது. மனிதனின் மூளையிலிருந்து உள்ளங்கால் வரை விஞ்ஞான முறைகள் கையாளப்படுகின்றன. **இருதய மாற்றுச் சத்திரசிகிச்சை, இருதய நாடி, அடைப்பு நீக்கம், சிறுநீரகக்கல் அகற்றல், குடல் சத்திரசிகிச்சை, சிசு உருவாக்கம், கை கால் பொருத்தங்கள், கண் சத்திரசிகிச்சை** என்பனவும் இன்னும் பலவும் விஞ்ஞான வியப்புகளே ஆகும். மனிதன் **மிருகங்களிலும் குளோனிங் முறையில்** இனங்களைப் பெருக்கிவிட்டான். நல்ல **ஆக்கங்களை மட்டுமல்ல எதிரிகளைத் தாக்கக் கூடிய போர்க் கருவிகளும் விஞ்ஞான அறிவால்** உண்டானவையே.

மனிதனின் மூளை வளர்ச்சியுடன், மனிதனிலே உருவான கேடான எண்ணங்களால் போட்டி பொறாமை முதலியன உருவானது. அதற்குத்தக்க ஆக்க முயற்சிக்குப் பயன்பட்ட மூளை அழிவு முயற்சியிலும் செயற்படத் தொடங்கவே **அணு ஆயுதங்கள், நச்சுக்குண்டுகள், நீர்வாயுக்குண்டுகள்** முதலியனவற்றையும் உருவாக்கினான். மறப்போரால் உயிர்களும், நாடுகளும், சூழலும் அழிவுறும் நிலை உருவாகிவிட்டது. **போக்குவரவு முறை எவ்வளவு முன்னேறி மனிதனை இலகுவாக்கியதோ அவ்வளவு அவனுக்கு அழிவையும், துன்பத்தையும் கொடுத்து**ள்ளது. மனிதனின் மூளை விருத்தியால் பல நன்மைகளைப் பெற்றிருந்த போதிலும் அதே மூளையால் மக்கள் விஞ்ஞான வியப்பில் அமிழ்ந்து ஆனந்தம் கொள்ள வழியின்றி விழிப்பதையும் காணமுடிகிறது. விஞ்ஞானம் ஆக்கத்துக்கே வழிவகுக்க வேண்டும்.

நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ந்து பார்த்தால், அறிவியல் விளைவுகள் உண்டான நன்மைகளே மிகுதியாய் உள்ளன. **அறிவியல் இருபக்கமும் கூர்மையான கத்தி போன்றது. அது நன்மையும் பயக்கும். தீமையும் பயக்கும். தீமையைப் போக்க அறிவியல் அறிஞர்கள் பாடுபட்டு வருகிறார்கள் அவ்வப்போது எச்சரிக்கையும் செய்து வருகிறார்கள்**. மக்கள் கலைப்பட வேண்டியதில்லை.

14. "வெகுசனத் தொடர்பு சாதனங்கள்"



- பொது மக்களுடன் **செய்திகள் பரிமாற்றம் செய்துகொள்ளும் சாதனங்களை** வெகுசனத் தொடர்பு சாதனங்கள் என்பர்.
- வெகுசனத் தொடர்பு சாதனங்களில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவை **வானொலி, தொலைக்காட்சி பேசும் படம், பத்திரிகை, சஞ்சிகை, துண்டுப் பிரசுரம், அறிவித்தல் பலகை, இணையம்** போன்றன.
- **செய்திகள், தகவல்களை ஒரே நேரத்தில் பல்லாயிரம் மக்களிடம்** சென்றடைய வைப்பதுதான் வானொலி.
- **1901இல் வானொலிச் செய்தி பரிமாற்றம் பரீட்சிக்க**ப்பட்டது. பின்னர் **கலை நிகழ்ச்சிகள், வர்த்தக விளம்பரங்கள், நாட்டு நடப்புக்கள்** வானொலியில் ஒலிபரப்பாயின.
- இன்று உலகமெங்கும் பல வானொலி நிலையங்கள் உள்ளன. **லண்டனில் இருந்து "பி.பி.சியின் தமிழோசை", கனடாவில் இருந்து "கீதவாணி", அவுஸ்திரேலியாவிலிருந்து "இன்பத்தமிழ் ஒலி" பிலிப்பீன்ஸிலிருந்து "வெரித்தாஸ்", நியுஸிலாந்திலிருந்து "தமிழ்த் தென்றல்", இந்தியா**வில் தூத்துக்குடியில் இருந்து **"தூத்துக்குடி வானொலி"** போன்றவையும் இன்னும் பலவும் ஒலிபரப்பாகின்றன.
- இலங்கையில் **"இலங்கை தேசிய சேவை", "இலங்கை வர்த்தக சேவை"** போன்ற அரசாங்க ஒலிபரப்புத் தாபனங்களும், **"சக்தி எவ்.எம்", "சூரியன் எப்.எம்.", "வர்ணம் எப்.எம்"** போன்ற தனியார் ஒலிபரப்பு நிலையங்களும் செய்திகளை, விளம்பரங்களை ஒளிபரப்புகின்றன.
- **கற்றோரும், மற்றோரும்** பயன்பெறக்கூடிய கையிலே **உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள், கலை நிகழ்ச்சிகள், அறிவியல் நிகழ்ச்சிகள்** போன்வற்றை இவ்வானொலிகள் ஒலிபரப்புச் செய்கின்றன.
- **1930களில் தான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின**. விஞ்ஞானிகளின் நவீன அரிய சாதனைகளில் ஒன்று டெலிவிஷன் என்னும் தொலைக்காட்சிப்பெட்டி, **டெலிவிஷன் பெட்டியிலுள்ள திரையில் தொலை தூரத்தில் நிகழ்கின்ற நிகழ்ச்சியை அப்படியே கண்டு மகிழ** முடிகிறது. இன்று

உலகமெங்கும் பல தொலைக்காட்சி நிலைகங்கள் உள்ளன. தொலைக்காட்சியில் உலக நிகழ்வுகளைப் பார்க்கவும், கேட்கவும் முடியும்.

- பொருட்களை விற்பனை செய்வதற்கு தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. **உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள், அறிவியல், அழகியல், சமூகவியல், மனையியல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்ற போது பல்லாயிரம் மக்கள் ஒரே நேரத்திலேயே கண்டு** களிக்கின்றனர்.
- **பல ஆண்டுகளிற்கு முன் மக்கள் அறிவை வளர்ப்பதற்கும், மகிழ்ச்சியுடன் காலம் கழிப்பதற்கும் கையாண்ட பல சிறந்த முறைகளில் நாடகமும்** ஒன்று. இன்று அதற்கு **ஈடாகப் பேசும் படம்** வந்துவிட்டது.
- நாம் படமாளிகைக்குச் சென்றால் அங்கே நமக்கு முன்னால் ஒரு வெள்ளித் திரையை மேடையில் காணலாம். படக்காட்சி ஆரம்பித்ததும் பலவகையான படங்கள் ஒன்றன்பின் ஒன்றாக திரையிலே தோன்றும். இப்படங்களிலே **நம் ஆயுளில் கண்ணால் காணமுடியாத தூரத்திலுள்ள பிரதேசங்களில் உள்ள காட்சிகளையும் நாடுகளையும் நகரங்களையும் அம்மக்களின் நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை நேரே காண்பது போல** பெறுகின்றோம்.
- மிக **நீண்ட வரலாற்றைக் கொண்டது பத்திரிகை**. நாடோறும் உலக நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகள் இவை வெளியிடுகின்றன.
- **ஒரு நாட்டில் எத்தனை மொழிகள் உண்டோ அத்தனை மொழிகளிலும் பத்திரிகைகள்** வெளிவருகின்றன. இவை தினசரியாகவும் வார மஞ்சரியாகவும் மாதசஞ்சிகையாகவும் வெளிவருகின்றன.
- **செய்திகளை மட்டுமல்லாது விளம்பரங்கள், கதைகள், கவிதைகள், தொடர் நாவல்கள், அறிவியல்** விடயங்கள் போன்ற பல்வேறு விடயங்களையும் வெளியிடுகின்றன. **பொழுது போக்கு சாதனமாகவும் அறிவு வளர்ச்சி, இரசனை விருத்தி** என்பவற்றிற்கு துணைபுரிவதோடு ஒரு விடயத்தினை பல்வேறு மக்களிடம் சென்றடைய வைக்கின்றது பத்திரிகை.
- **எந்த அளவிலான பொருளாதார மட்டத்தைக் கொண்டோருக்கும் எந்தப் பிரதேசத்திற்கும் எந்தத் தரத்திற்கும் எந்த வயதினருக்கும் ஏற்றவாறு ஒரு குறிப்பிட்ட விடயத்தை இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியவாறு அறிவினை**க் கொடுக்கும் சக்தி பத்திரிகைக்கு உண்டு.
- பாதையின் இருமருங்கிலும் பொது மக்கள் நடமாடும் இடங்களிலும் பெரிய அளவிலான தகடுகளால், பலகைகளால் ஆக்கப்பட்ட அழகிய சித்திரங்களையும் உள்ளங்கவர் வாசகங்களையும் கொண்ட வர்ண விளம்பரங்களைக் காணலாம். இவ்வாறான விளம்பரப் பலகைகளை உணவுப் பொருட்களை, குடிபானங்களை, இயந்திர எதிரிப்பாகங்களையும் வேறு சிலவற்றையும் மக்களிற்கு தெரியப்படுத்தவும் பயன்படுத்துவர்.
- சுவரொட்டிகளும் வெகுசனத் தொடர்பு சாதனத்துக்குள் இடம்பெறும். **சுவரொட்டிகள் பலவர்ணங்களில் அச்சிடப்பட்டோ அல்லது பல வர்ணங்களில் எழுதப்பட்டோ** இருக்கும். வர்ணங்களைக் கொண்ட இப்பிரசுரங்கள் **மதிற்சுவர்கள், அறிவுப்புப் பலகை, பஸ்தரிப்பிடம்** போன்றவற்றில் ஒட்டப்பட்டிருக்கும்.
- **திரைப்படம், பொதுக்கூட்டம், சமய, சமூகவிழா, அரசியல் நிகழ்வு, தனிப்பட்ட வகுப்புக்கள்** போன்றவற்றில் மக்களிற்கு தெரியப்படுத்துவதற்கு இது பயன்படுகிறது.
- துண்டுப்பிரசுரம் சிறியதொரு பிரசுரமாகும். இதனை **வீதியிலே செல்கின்ற மக்களிற்கு விநியோகிப்பர்.**

- இத்துண்டுப் பிரசுரம் மூலம் **சிறு வியாபாரிகளும் தனியார் கல்வி நிலையங்களும்** அதிக பயன்பெறுவர்.
- மக்களிடத்திலே ஒரு **குறிப்பிட்ட விஷயத்தைக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் மதப்பிரச்சாரங்களிற்கும் துண்டுப் பிரசுரங்கள்** உபயோகமாகின்றன.
- இத்துடன் நவீன வெகுசனத் தொடர்புசாதனமாக அதிகரித்த பாவனையில் இயங்கும் இணையமும் மிகச்சிறந்த தொடர்புசாதனமாக காணப்படுகின்றமையும், அவற்றின் பயன்பாடும் கூறப்படுதல் நன்று.

15. "சிறுவர் உரிமை"



- ✓ சமுகங்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள் சிறுவர்களே! ஆனால் **மிருகத்தன்மை கோரத் தாண்டவமாடும் நாடுகளில் இளமைப் பருவத்தைப் பறிகொடுத்த சிறுவர்களிடம்** இருந்து எந்த வகையான எதிர்காலத்தை நாம் எதிர்பார்க்க முடியும்?
- ✓ **13ஆம் நூற்றாண்டு வரை சிறுவர் உரிமை பற்றி யாரும் அக்கறை காட்டவில்லை. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் மேற்குலகம் சிறுவர் தொடர்பில் காட்டிய அக்கறை** காத்திரமானதாகும்.
- ✓ சிறுவர்கள் விடயத்தில் நாம் அவர்களோடு **அன்பாக நடந்து கொள்ள வேண்டும். சிறுவர் சிறுமியரை நமது பிள்ளைகள் போல் பராமரிக்க** வேண்டும்.
- ✓ **போரின் கொடுமைகள் சிறுவர்களையே பெரிதும்** பாதிக்கின்றன. **இலங்கையில் கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஒன்றரை லட்சம் சிறுவர்கள் ஆயுதப் போரினால் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.** இதிலும் **நான்கு மடங்கனோர் அங்கவீனர்கள்** உள்ளனர். **எண்ணிக்கையற்ற மேலும் பலர் மிருகத்தனமான விளைவுகளினால் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டு**ள்ளனர். இன்னும் ஏராளமான சிறுவர் சிறுமியர் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பல நாடுகளில் பகடைகளாகவும் இலக்குகளாகவும் சிறுவர்கள் நடத்தப்படுகிறார்கள். **கொறோனா நோயினால் கற்றல் உரிமையை இழந்த பின்னைகள் 250பில்லியன்** எனக் கூறப்படுகிறது.
- ✓ **அணி திரட்டப்பட்டும், கடத்திச் செல்லப்பட்டு** சிறுவர்கள் **யுத்த களங்கள் ஆயுதம் ஏந்திப் போராட** நிர்பந்திக்கப்படுகிறார்கள்.
- ✓ **சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்படுதல், கடுமையான சித்திரவதை, காணாமல் போதல் பணம் கேட்டு கடத்தப்படுதல்** எனப் பல வடிவங்களில் சிறுவர்கள் மீதான அவலங்கள் நிகழ்கின்றன.
- ✓ யுத்தத்தின் சகல விதமான அவலங்களிற்கும் முகம் கொடுக்கும் சிறுவர்களின் வாழ்தலிற்கான உரிமை மறுக்கப்படுகிறது.
- ✓ சிறுவர் உரிமைகளிற்காகப் பாடுபடுபவர்கள் சிறுவர் தொடர்பில் சமுதாயத்தின் மனப்பாங்கைக் கருத்தில் எடுத்தல் அவசியம். **சிறுவர் தொடர்பான சமுதாயத்தின் மனப்பாங்கு பொருளாதார, சமூக, அரசியல், கலாசார காரணிகளால் தீர்மானிக்க**ப்படுகிறது.
- ✓ **19ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் குழந்தை ஒரு சொத்தாகவே காணப்பட்டது. எனவே அதை விற்கலாம், அதைக் கைவிடலாம் அல்லது துஷ்பிரயோகம்** செய்யலாம்.
- ✓ **சிறுவர் தொடர்பான நீதி அமைப்புக்கள் இவற்றினை உள்வாங்கி சிறுவர் தொடர்பான வன்முறைகளிற்கு சட்டங்கள் மூலம் முற்றுப்புள்ளி** வைத்தன.

- ✓ **இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சிறுவர்களைத் தனித்த பிரிவினராக ஏற்று**க்கொள்ளும் பாரிய மாற்றம் ஏற்பட்டது.
- ✓ **1949**ஆம் ஆண்டில் **"ஜெனீவாசமவாயம்"** ஆயுதப் பிணக்குகளில் சிறுவர்களின் நிலைபற்றி விசேடமாகக் குறிப்பிட்டு **பதினைந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர் எவரும் போரில் பங்குகொள்ளலாகாது** என்று விதித்துள்ளது.
- ✓ **1960 களின் பிற்கூற்றில் யுனிசெப் ஆரம்பித்த புதியதொரு முயற்சி சிறுவர்களிற்கென சமாதானப் பிராந்தியங்களை உண்டாக்கியமை** ஆகும். **போர் நடக்கின்ற நாடுகளில் குறுகியகால போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி சிறுவர்களிற்கான தடுப்பு மருந்துகளை ஊட்டக்கூடிய சூழ்நிலை**யை யுனிசெப் ஏற்படுத்திக் கொடுக்கிறது.
- ✓ **லெபனான், பிலிப்பைன்ஸ்** ஆகிய நாடுகளில் **யுனிசெப் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைந்து** பல்வேறு **சமய, இனப் பின்னணிகளைச் சார்ந்த சிறுவர்களை ஒன்று சேர்த்து அவர்களிடையேயுள்ள வேறுபாடுகளை விளக்கி அவற்றை மதித்து வளரப் பயிற்றும் திட்டங்களை** நிறைவேற்றி வருகிறது.
- ✓ இன்று **சிறுவர்களின் கருத்துக்கள், சமுதாயத்துடனும் மக்களுடனான உறவுகள், தார்மீக சமுதாயத்தையும் வாழ்க்கையையும் விளங்கிக் கொள்ளும் மனப்பாங்கு** யாவும் பாதிக்கப் படுகின்றன.
- ✓ **1924**இல் **ஐக்கியநாடுகள் அவையினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் பசியில் இருந்தும் ஏனைய பொருளாதாரத் தேவைகளிலிருந்தும் குழந்தைகள் பாதுகாக்க**ப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.
- ✓ **1948**ஆம் ஆண்டு **சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் சிறுவர்கள் பாதுகாக்க**ப்பட வேண்டும் என வலியுறுத்தியது.
- ✓ **ஐக்கிய நாடுகள் சபை 1979**ஆம் ஆண்டை **சிறுவர் ஆண்டாக பிரகடனப்படுத்தி 1999இல் சிறுவர் உரிமைகள் பிரகடனத்தின் இருபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடி**யது.
- ✓ **1989ஆம் ஆண்டின் பொதுச் சபை சிறுவர் உரிமைகள் சமவாயத்தை** அங்கீகரித்தது.
- ✓ **சர்வதேச சிறுவர் தினம் ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் முதலாம் திகதி** கொண்டாடப்படுகிறது.

16."டெங்கு காய்ச்சல்"



- ✓ மூளைக் காய்ச்சல் போன்று **நுளம்புகளால் (கொசுக்களால்)** பரவும் மற்றொரு காய்ச்சல் டெங்கு காய்ச்சல் ஆகும். இது **குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோருக்கே அதிகம்** ஏற்படுகிறது.
- ✓ **டெங்கு (Dengue) என்ற வைரஸ் கிருமிகள் குழந்தைகளைப் பாதிக்கும்போது போது டெங்கு** காய்ச்சல் வருகின்றது. ஏதாவது ஒரு வகை வைரஸ் மனிதனைத் தாக்கினாலே டெங்குக் காய்ச்சல் பரவிவிடும்.
- ✓ டெங்கு கிருமிகள் **ஏடிஸ் இஜிப்டி (Aedes aegypti)** என்ற நுளம்புகள் மூலம் பரவுகின்றன.
- ✓ டெங்கு காய்ச்சலை உண்டாக்கும் **நுளம்புகள்** வாழும் இடங்களாக **தண்ணீர் உடைந்த ஓடுகள், சட்டிகள், தகரப் பேணிகள், தேங்காய்ச் சிரட்டைகள், டயர்கள்** போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- ✓ இந் நுளம்புகள் **பகலில் மட்டுமே மனிதனைக் கடிக்கும்.**

டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் பின்வருவன தென்படும்.

1. திடீரென்று **104 °F** வரை **காய்ச்சல்** கொதிக்கும்.
2. **நெற்றியில் பொறுக்கமுடியாத வலி, தலைவலி, மூட்டுவலி** ஏற்படும்.
3. **உடல் வலி** பொறுக்க முடியாதிருக்கும்
4. உடலில் **சிவப்புநிறத் தடிப்புகள்** தென்படும்.
5. **பல் ஈறுகளில் இரத்தம் கசியும். மூக்கிலிருந்து இரத்தம் கொட்டும். வாந்தி, மலம், சிறுநீர் என்பவற்றில் இரத்தம்** கலந்து வெளியேறும்.

✓ இந்த அறிகுறிகள் தென்பட்டால் சீக்கிரத்தில் மரணம் ஏற்படும்.

✓ **சிலரிற்கு எந்த அறிகுறியும் தெரியாமல் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு திடீரென்று ஓர் அதிர்ச்சிநிலை தோன்றி கை, கால் குளிர்ந்து**விடும். **மூச்சிறைப்பு** ஏற்படும். **இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, வெகுவாகக் குறைந்து சுயநினைவை இழந்து**விடும். மரணத்தையும் தழுவும்.

டெங்கு காய்ச்சல் வராமல் தடுப்பதற்கான முறைகள்

1. **நுளம்புக் கடியைத் தடுப்பதற்கான முன்னேற்பாடு**களைச் செய்தல் வேண்டும்.
2. **வீட்டில் சுற்றுப்புறங்களிலும் தண்ணீர் தேங்காமல்** பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. **நுளம்பு மருந்து தெளித்தல், உறங்கும் போது குழந்தையின் உடம்பு முழுவதும் உடைகளால் மூடிவிடுதல்** வேண்டும்.
4. **நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டவுடன் உடனடியாக வைத்தியரை நாட** வேண்டும்.
5. சுற்றுப் புறச் சூழலுக்கு மருந்து தெளிக்கவேண்டும். **செடிகொடிகளுக்கு மத்தியில், கானுக்குள், பூச்சாடி, நீர் நிற்குமிடம்.**

நுளம்பைக் கட்டுப்படுத்தும் முறைகள்

✓ **நீரை நிரப்புவதன் மூலமும் நீரை வடிய விடுவதன் மூலமும்** நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அகற்றலாம்.

✓ **தேவையற்ற தகரங்கள், டயர்கள், வெற்றுப்பேணிகள்** மழைநீர் தேங்குபவற்றை அகற்றல்.

✓ மழை **நீர் வடிவதற்கு சிறந்த வாய்க்கால் வரைகளை** அமைத்தலும் அவற்றை பராமரித்தலும்.

✓ **பூச்சாடிகளைச் சுத்தம் செய்து நீரை மாற்று**தல்.

✓ **நீர்நிலை**களில் ஆலோசனைகளுக்கேற்ப **இரசாயனப் பொருட்களை**ப் பாவித்தல்.

✓ **சுகாதாரப் பகுதியினரின் ஆலோசனை**களை நாடல்.

17. "கையடக்க தொலைபேசி"



✓ தொலைபேசி **இவ்வுலகில் மிகப்பெரிய பங்கைக்** கொண்டுள்ளது. இப்பொழுது தொலைபேசி **இன்றியமையாதது** ஆகிவிட்டது. அவசரத்திற்கு பிறரைத் தொடர்பு கொள்ள தொலைபேசி உதவுகிறது.

✓ **அமெரிக்காவைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல்** என்பவர் கண்டுபிடித்தார். தொலைபேசி மிகத் தொலைவில் உள்ளோரையும் கால தாமதமின்றி நேருக்கு நேராகப் பேசும் அனுபவத்தை கொடுக்கிறது. **தொலைபேசி இருந்தால் சென்று வந்த செலவும் நேரமும் சிரமமும் மிச்சம்** ஆகும். தொலைபேசி இது போன்ற முறைகளுக்குக் குறைந்த செலவுடன் நேரத்துடன் உதவுகிறது. இன்றைக்கு உலக முழுமைக்கும் தொலைபேசி மூலம் மனிதத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். பல தொழில்களில் ஈடுபட்டிருக்கும்போது அருகிலுள்ள இடங்களிலிருந்தும் பேசுவதற்கும் தொலைபேசி ஒரு சிறந்த முறையாக தோன்றுகிறது.

- ✓ **நவீன தொடர்பு வளர்ச்சியாக கையடக்கத் தொலைபேசி** முறை தோன்றியுள்ளது. இது **பிரான்டன் பெக்கர் என்ற சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் 1980**இல் கண்டு பிடிக்கப்பட்டது.
- ✓ இன்றைய அறிவியல் உலகில் இது மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இது **அளவில் சிறியதாக உள்ளதால் எளிதாக எங்கும் எடுத்துச் செல்ல வசதியாக** உள்ளது. வாகனங்களில் பயணம் செய்யும் போதும் வீடுகளில் இருக்கும்போது வேறு எங்கு இருக்கும்போது கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பு கொண்டு பேச மிகவும் உதவியாக உள்ளது.
- ✓ வேண்டும் நபரைத் தொடர்பு கொள்ளும் வசதியைத் தவிர, இதில் மேலும் பயன்கள் உள்ளது. சில **கையடக்கத் தொலைபேசியில் புகைப்படம் எடுக்கும் வசதி, பாடல்கள் கேட்கும் வசதி, இன்டர்நெட் வசதிகள், தகவல்களை பாதுகாத்தல், கற்றல், கற்பித்தல் பணிகளை முன்னெடுத்தல்** போன்ற பல வசதிகள் உள்ளன. இவற்றில் பல வகையான **விளையாட்டுகள்** உள்ளன. சில சமயங்களில் **பொழுதுபோக்கும் கருவியாக**வும் இதைப் பயன்படுத்துகிறார்கள்.
- ✓ **கையடக்க தொலைபேசியில் பேசுவதைத் தவிர்த்து எழுத்து மூலமும் தொடர்பு** கொள்ளலாம். பெரிய நிறுவனங்கள் இச்சேவையை இலவசமாக அளிக்கின்றனர். ஆதலால், சிறுசிறு தகவல்களை **(குறுந் தகவல்களை)** எழுத்து வடிவத்தில் அவர்கள் விரும்பும் நபருக்கு ஒரு நொடியில் அனுப்பிவிடலாம். இதனால் தொலைபேசி செலவு குறைகிறது. சிலர் இந்த வசதியை கேளிக்கைக்காகப் பயன்படுத்துகின்றனர்.
- ✓ எதையும் பயன்படுத்தும் முறையில்தான் அதில் உள்ள நன்மை, தீமை கணிக்கப்படுகிறது. அதிக கைத்தொலைபேசி பாவனையால் **கற்றலில் ஈடுபாடு குறைவு, அதிர்வலையின் தாக்கம், மந்தபுத்தி, மனஅழுத்தம், கலாச்சார சீரழிவு, நவீனமயமாதல் எனும் போர்வையிலான தவறான நடைமுறைகள், தவறான பாலியல்சார் உந்துதல்கள், தவறான உறவு வளர்ச்சி, உதிரப்பாகங்களால் சூழல் மாசடைவு, தற்கொலைகள், இயற்கை அனர்த்தங்கள்(மின்னல் தாக்கம்), தீவிரவாத வளர்ச்சி, இணைய தகவல் திருட்டு** என பல வாதகங்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. இவற்றை தவர்க்கும் வழிமுறைகளையும் கைத்தொலைபேசி பயன்படுத்துபவர்கள் கவனத்தில்கொள்ளவேண்டும்.
- ✓ அறிவியல் உலகில் இன்று தொலைத்தொடர்பு கண்ட வளர்ச்சியினால் உலகம் மிகச் சிறிய பரப்புடையதாக விளங்குகிறது. **"உலக கிராமம்"** ஆக **"யாதும் ஊரே யாவருங் கேளிர்..."** எனும் கணியனின் பறநானூற்று வரிகளின் உண்மை புலப்படுகிறது. எத்துறையினரும் யாவரும் பதிய கண்டுபிடிப்புகளால் பயன்பெறுகின்றனர்.

18. "அறிவியலின் வளர்ச்சி"



- ✓ **"அறிவியலில் நாம் புதிதாக காணப்போவது ஒன்றும் இல்லை, அனைத்தும் புதைந்த உண்மைகள் தான். யார் அதைத் தோண்டி எடுக்கிறார்கள் என்பதுதான் இங்கு கேள்வி"** என்று அழகாகவும் அனைவருக்கும் புரியும் வண்ணமும் முன்னாள் குடியரசுத் தலைவரும் விஞ்ஞானியுமான மதிப்பிற்குரிய **திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம்** அவர்கள் கூறியுள்ளார்.
- ✓ அக்காலத்தில் நம் **முன்னோர்கள் அனுபவங்களை மட்டுமே கொண்டு அறிவியல் உண்மைகளை எளிய முறையில் நடைமுறைப்**படுத்தி வந்தனர். **மரங்கள் வளர்த்தால் நம்மைச் சுற்றி பிராணவாயு எனப்படும் O_2 மிகுதி**யாகும். அதனால், உடல் ஆரோக்கியம் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது

என்று இப்போது நாம் ஏட்டில் படித்துப் புரிந்து கொள்கிறோம். ஆனால், **"வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்"** என்றனர் நம் முன்னோர். சாலை ஓரங்களில் மரம் நட்டார் **அசோகச் சக்கரவர்த்தி "ஆலும் வேலும் பல்லுக்குறுதி"** ஆனால் இன்று பல புதிய முறைகளைக் கையாளுகின்றனர்.

"பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்.
பாயும் மீன்களின் அழகினில் படகினைப் படைத்தான்.
எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்."

என்று அழகாக அறிவியலை நடைமுறையுடன் அழகாக ஒப்பிட்டார் தமிழ் அறிஞர். நாம் இன்று பல அறிஞர்களிடம் கல்வி அறிவு பெற்று அறிவியல் வளர்ச்சியின் பயன்களை அனுபவிக்கின்றோம். இக்காலக் கட்டிடக் கலை வல்லுநர்கள் கூட கட்டமுடியாத அற்புதமான கட்டிட வேலைப்பாடுகளுடன், கலைநயத்துடன் காற்று, வெளிச்சம் இவற்றை கணக்கிட்டு கட்டிய கோட்டைகள் ஏராளம்.

- ✓ **"சாலமன் அரசர்"** அந்தக் காலத்தில் **தீப்பந்தங்களே விளக்காக இருப்பதைக் கண்டு தன் ஞானத்தாய் தீயே இன்றி விளக்குகள் வருங்காலத்தில் தலைகீழாக எரியும்** என்றார். அதைக் கேட்ட மக்கள் அவரைக் கண்டு சிரித்தனர். **"இது எப்படி சாத்தியமாகும்?"** என்றனர். அதற்கு விடை இப்போது நம்மிடம் **"தாமஸ் ஆல்வா எடிசன்"** கண்டுபிடிப்பு வழியாக விளக்குகள் தலைகீழாக மட்டுமல்ல பல வழிகளிலும் பல வண்ணங்களிலும் எரிகின்றது.

"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப எண்ணங்களை நாம் உருவாக்கப் பாடுபடுவோம்.

- ✓ அறிவியலின் வளர்ச்சியில் ஒருவர் மட்டும் பங்கு வகிக்க முடியாது. இதையே ஒரு அறிஞர் அழகாக, **"கலை என்றால் நான், அறிவியல் என்றால் நாம்"** என விளக்கியுள்ளார்.
- ✓ **தொலைவில் உள்ளவர்களிடம் தொடர்பு கொண்டு பேசுவது என்பது ஒரு கனவு** அக்காலத்தில். அதை **"அலெக்ஸாண்டர் கிரஹம்பெல்"** என்ற விஞ்ஞானி நினைவாக்கினார். இன்று அதன் **வளர்ச்சி படிப்படியாக முன்னேறி கைக்குள் அடங்கும்**. எங்கு சென்றாலும் எடுத்துச் செல்லும் **செல்போன் (செல்லிடம் பேசி)** என்னும் கருவியே இன்றைய வளர்ச்சி.
- ✓ **"அறிவியல் எல்லாவற்றின் முதல் வார்த்தையைக் கூறிவிடும். ஆனால் முடிவை நிர்ணயிக்காது"** என்றார் ஒரு அயல்நாட்டு அறிஞர். அது தொடரும் பாதையே தவிர முடிவே இல்லாத ஒன்று.

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று" என்று வள்ளுவர் திருக்குறளில் நா அடக்கத்தை அதன் முக்கியத்துவத்தை அழகாகக் கூறியுள்ளார். **"இதய அறுவை சிகிச்சை"** என்றால் அது ஒரு பெரிய புணர் ஜென்ம விஷயமாக அக்காலத்தில் கருதினர். இன்று இதயத்தை வெளியே எடுத்து பொறுமையாக பழுது பார்த்து இயங்க வைக்கின்றனர் நம் மருத்துவர்கள்.

- ✓ **"அறிவியல் உண்மையானவை ஆனால் ஆபத்தானவை"** என்கிறார் **ஜி.பி.ஷா.** உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் பண்டமாற்று முறை போல் மாற்றி பொருத்தும் அளவுக்கு அறிவியல் வளர்ந்துள்ளது. **அறுவை சிகிச்சையும் மீறி லேசர் கருவிகொண்டு நவீன வளர்ச்சியில் சிகிச்சை** அளிக்கப்படுகிறது.
- ✓ **"உணவே மருந்து, மருந்தே உணவு"** என்னும் மொழி அழகாக, சுருக்கமாக, ஆழ்ந்த அர்த்தமுடைய உண்மைகளை நமக்கு வெளிப்படுத்துகிறது.

- ✓ அறிவியல் வளர்ச்சியில் நல்லனவற்றை எடுத்து செயல்படுவோம் தீயனவற்றை அறவே எண்ணாதிருப்போம்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக" என்னும் செந்நாப் புலவன் வள்ளுவனின் வாக்கிற்கேற்ப அறிவியல் வளர்ச்சியை நாம் ஆக்கபூர்வமான வழியில் செயல்படுத்துவோம்.

